Registered as a news paper.
பக்கங்கள்: பத்து
விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

நியூ பிரியங்கா
அற்புதமான வேலைப்பாடுடைய
அதி உன்னத தங்க நகைகளுக்கு
அழகு மங்கையர் நாடுவது
நியூ பிரியங்கா
177A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி. 2148

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 புரட்டாதி 16 ஆம் நாள் (02.10.2002) புதன்கிழமை இதழ் : 02

# போர்க் கைதிகளே விடுவிக்கப்படும்போது சந்தேக நபர்களான எமக்குச் சிறையா?

## சாகும்வரை உண்ணாவிரதப் போரில் 139 தமிழ் அரசியற் கைதிகள் குதிப்பு

(கொழும்பு)

**போர்க்கைதிகளே இன்று விடுவிக்கப்படும்போது - சந்தேகத்தின் பெயரில் கைதுசெய்யப்பட்டுள்ள நாம் என்ன பாவம் செய்தோம்? இனி, இறுதிமுடிவு கிடைக்கும்வரை சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம் என அறிவித்து தமிழ் அரசியற் கைதிகள் 139 பேர் போராட்டத்தில் குதித்துள்ளனர்.**

எதுவித நிபந்தனையுமின்றி தாம் விடுதலை செய்யப்படவேண்டும் என்றும், தம்மை அமைச்சர் மிலிந்த மொறகொட நேரில் வந்து சந்தித்து விடுதலை தொடர்பாக உறுதிமொழி அளிக்கவேண்டும் என்றும், கோரிக்கைகளை முன்வைத்து களுத்துறைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 139 கைதிகள் நேற்றுமுதல் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

இவர்களில் 11பேர் நேற்று மாலை முதலாக சிறைக் கூரைகளின் மேல் ஏறி தமது போராட்டத்தைத் தொடர்கின்றனர். எனினும் நேற்று இரவு வரை இவர்களது கோரிக்கை தொடர்பாக எவ்வித பதிலும் அரசதரப்பிலிருந்து வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

## நமது ஈழநாடும், மாம்பழமும் தனக்கு மிகவும் பிடிக்குமாம்!

### வர்ணனையாளர் ரொனி கிறேக்கின் மகள்

(உமேஷ்)

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும் பிரபல கிரிக்கெட் வர்ணனையாளருமான ரொனி கிறேக், அவரதுமகள் மற்றும் ரொமேஷ் களுவிதாரண ஆகியோர் சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு, யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் சிறந்த இளம் கிரிக்கெட் வீரர்களை தெரிவுசெய்து பரிசில்கள் வழங்குமுகமாக இங்கு வந்திருந்தனர்.

நமது ஈழநாடு பத்திரிகை புதிதாக வெளிவருவதை அறிந்த ரொனி கிறேக்கின் புதல்வி சமந்தா கிறேக், நமது ஈழநாடு பத்திரிகையைப் பார்க்க வேண்டுமென நமது நிருபரிடம் ஆவல் வெளியிட்டார்.

நமது ஈழநாடு புதிதாக வெளிவர ஆரம்பித்திருப்பது தமக்கு மகிழ்ச்சியைத் தருவதாகவும், யாழ்ப்பாணத்தற்கான தனது முதல் விஜயம் இடம்பெற்ற தினத்தில் புதிய பத்திரிகையொன்று வெளிவர ஆரம்பித்திருப்பது தமக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தருவதாகவும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்து மக்களும், சூழலும் தம்மை வெகுவாக கவர்ந்திருப்பதாக குறிப்பிட்ட சமந்தா கிறேக், யாழ்ப்பாண மாம்பழம் தமக்கு அதிக விருப்பமானதென்றும் தெரிவித்தார்.



ரொனி கிறேக் மகளுடன்

## பீரிஸ் - மிலிந்த இடையே முறுகல்நிலை உருவானது?

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை நடத்துவதற்கு அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டுள்ள நான்கு உறுப்பினர் குழுவில் கருத்துமுரண்பாடுகள் உருவாகியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தாய்லாந்தில் நடைபெற்ற முதற்கட்டப் பேச்சுக்களில் கலந்துகொண்ட அமைச்சர்கள் மிலிந்தமொரகொடவுக்கும், ஜி.எல்.பீரிஸுக்கும் இடையில் கருத்து முரண்பாடு தோன்றியிருக்கிறது.

மிலிந்தமொரகொடவின் செயற்பாடுகள் குறித்தும், தாய்லாந்துப் பேச்சுகளின்போது அவர் நடந்துகொண்ட முறைகள் குறித்தும் ஜி.எல்.பீரிஸ் விசனமடைந்துள்ளார்.

இதனால் மிலிந்தமொரகொடவின் செல்வாக்கைப் பலவீனப்படுத்தும் நோக்கில் தனக்கு நெருக்கமான ஊடகத்துறையினர் சிலரை ஜி.எல்.பீரிஸ் சந்தித்துப் பேசியுள்ளார்.

இச்சந்திப்புக்களின்படி அமைச்சர் பீரிஸுக்கு ஆதரவு வழங்க சில ஊடகத்துறையினர் இணங்கியிருப்பதாகவும் தெரியவருகின்றது.

### விண்ணாணம் விநாசியர்




யாழ்ப்பாண மாம்பழம் நல்ல இனிப்புத்தான். எங்கடை சனத்தின்ரை கண்ணீர்க் கதையளையும் எவையாவது அவாவுக்குச் சொன்னனியளே...?

### வாழைச்சேனை ஆர்ப்பாட்டத்தில்

## மாணவன் மீது பொலீஸ் தாக்கு; ஜீப் கண்ணாடி நொருக்கப்பட்டது!

### வீதியைத் திறக்கப் படையினர் சம்மதம்

(மட்டக்களப்பு நிருபர்)

வாழைச்சேனை பொலீஸ் நிலைய வீதியைத் திறக்கக் கோரி நேற்றுமுன்தினம் பொதுமக்களால் நடத்தப்பட்ட வீதி மறிப்புப் போராட்டம் அப்பகுதியில் பெரும் பதற்றநிலையைத் தோற்றுவித்தது.

வீதியைத் திறக்கக் கோரி சுமார் மூவாயிரம் பொதுமக்களும் ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்களும் வீதியில் திரண்டு வீதிமறியல் போராட்டத்தில் குதித்தனர். இதன்போது வாழைச்சேனை வாணி வித்தியாலய மாணவன் ரி.ஹரிகரன் என்பவர் பொலிஸாரால் தாக்கப்பட்டதையடுத்து நிலைமை மோசமாகியது. ஆத்திரமடைந்த மாணவர்கள் பொலீஸாரின் ஜீப் வண்டியைத் தாக்கியதில் அதன் கண்ணாடி நொருங்கியது. இதையடுத்துப் பொலிஸார் மாணவரை விரட்டியடிக்க துப்பாக்கிச்சூடு நடாத்த முற்பட்டனர். இதைக் கண்ட பொலீஸ் அதிகாரி ஒருவர் பொலீ

(10ஆம் பக்கம் பார்க்க)

### மட்டு - திருமலை வீதியை

## இருபத்துநான்கு மணிநேரமும் திறக்காவிட்டால் போராட்டம்

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டு - திருமலை வீதியை 24 மணிநேரமும் திறந்துவிடுவது குறித்து எதிர்வரும் 7 ஆம் திகதி விடுதலைப் புலிகள் தரப்பிற்கும் - இராணுவத் தரப்பிற்கும் இடையில் உயர்மட்டப் பேச்சுகள் நடைபெறவுள்ளன.

இப்பேச்சுக்களைத் தொடர்ந்து வீதி திறக்க நடவடிக்கை எடுப்பப்படாவிட்டால் மக்கள் வீதியில் இறங்கி பெரும் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லவேண்டியிருக்கும் என பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

### ஏழு படையினர் விவகாரம்

## கண்காணிப்புக் குழுத் தலைவர் புலிகளை திருமலையில் சந்திப்பு

(கொழும்பு)

திருகோணமலை வில்கம் விகாரைப் பகுதியில் விடுதலைப் புலிகளால் கைதுசெய்யப்பட்ட ஏழு இராணுவச் சிப்பாய்களையும் விடுவிக்கும் முயற்சியின் ஒரு கட்டமாக இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஹொவடே நேற்றுத் திருகோணமலை சென்று தனித்தனியாகப் படையினரையும் விடுதலைப் புலிகளையும் சந்தித்துப் பேச்சுகளில் ஈடுபட்டார்.

விடுதலைப் புலிகள், ஏழு இராணுவத்தினரையும் விடுவிப்பதற்கு இணங்குவதெனில், படையினர் கைதுசெய்து வைத்திருக்கும் தமது உறுப்பினர்கள் இருவரையும் விடுவிக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளனர்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## இயல்புநிலையை விரைவில் கொண்டுவர புலிகள் படைத்தரப்பிடம் வலியுறுத்து!

### இளம்பரிதி, பாப்பா - சரத்பொன்சேகா, ஒபேசிங்க சந்திப்பு

(நமது நிருபர்)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், படைத்தரப்புக்குமான சந்திப்பு ஒன்று போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவின் ஏற்பாட்டில், நேற்றுக்காலை யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவைச் சேர்ந்த ஒலை புண்ரம் தலைமையில் - தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, அரசியல்துறைப் பிரமுகர்களான பாப்பா, நிசாந்தன் ஆகியோரும், யாழ். குடாநாட்டுக்கான இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, வடபகுதிக்கான கடற்படை பிரதித்தளபதி கொமாண்டர் ஒபேசிங்க ஆகியோருக்கு இடையே இச்சந்திப்பு நடைபெற்றது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் நேற்றுக்காலை பத்து மணியளவில் ஆரம்பமான இச்சந்திப்பில் பல்வேறு விடயங்கள் குறித்து இரண்டு தரப்பினரும் கலந்துரையாடினர்.

இச் சந்திப்பின் போது விடுதலைப் புலிகளினால் கீழ்வரும் விடயங்கள் பற்றி இராணுவத்தரப்பிடம் எடுத்துக் கூறப்பட்டதாக யாழ்மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி தெரிவித்தார்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி மக்களுக்கான இயல்புநிலை ஏற்படுத்தப்பட வேண்டும்.

(10ஆம் பக்கம் பார்க்க)

நமது ஈழநாடு இணையத்திலும்...!
www.eezhanadu.com

# யாழ்.பல்கலை வெளிவாரிப் பட்டப்படிப்பு முடிவுகள் நேற்று மாலை வெளியாகின!

(நமது நிருபர்)

யாழ்.பல்கலைக்கழகத்தின் வெளிவாரி பட்டப்படிப்பின் இளங்கலைமாணி பகுதி-II ற்கான பெறுபேறுகள் நேற்று மாலை வெளியிடப்பட்டன. இந்தப் பரீட்சையில் சித்தியடைந்தோர் பெயர் விபரங்கள் இங்கு தரப்படுகின்றன.

கே. மதிவதனி, கே. சகீலா , என். உமாதேவி ,வி. தேவகி, வி. பத்மலோஜினி, என். புஸ்பமாலா, கே. கலாமோகன், ரி.மலர்விழி , ரி. கவிதா, கே. தயாநந்தி , எஸ்.நரேந்திரன் ,என். சிவலோக நாயகி ,பி. புவனலோஜினி ,எஸ். கலாஜினி, கே. வைதேகி, என். நாகேஸ்வரி, ரி. லோகராஜா, எல். பிறேமா, எஸ். தயாளன், கே. அபிமன்யு, பி. அகலிகை, வி. அம்பிகை, கே. ஆனந்த நடராசா, கே. ஆனந்தி , ரி. அங்குசன், எஸ். அன்புமதி, கே. அனுஷா, பி. அருந்தவம் , ஐ. அருள்நேசன், ஜே. பாமா, கே. பாமா, என். சுஜாதா, கே. சந்திரிக்கா, வி. சித்திரா, ஜே. சாருமதி, வை. தேவதாஸ் ,கே. இளமதி, வி. கணேசலிங்கம், எ.ஹரிகனராஜா, ஆர். குணாவதி , ஆர். கௌஷிஜா, ஜே. இக்னதாஸ், ரி. ஜெகதீஸ்வரி ,எவ். ஜெனிற்றா பெர்கின், எஸ். ஜெகதாம்பிகை, ரி. யசோதின், ஜே. பாலசிங்கம், என். ஜெயநந்தினி, பி. ஜெயரூபி, எஸ். ஜீவதுளசி ,பி. ஜெயசீதா, எஸ். ஜெயவதனி, வி. ஜெயசுந்தர், சி. ஜெயகுமார், ரி. கலைச்செல்வி, பி. கலைச்செல்வி, வை. கஜந்தினி, எஸ். கமலக்கண்ணன்,என். காண்டீபன், வி. கவிதா, பி. பிரசாந்தி, ஏ. லிற்றா, எம். லிங்கேஸ்குமார், ஏ. லலிதா, எஸ். லோகேஸ்வரி, எஸ். கவிதா, கே. மலர்விழி ,ஆர்.இ. எஸ்.ஆர். மேரி றொஷாந்தி, ரி. நிஷாந்தினி, எஸ். மேரிலக்ஷனா, கே. மதிவதனி, பி. மதிவதனி, பி. நடேசலிங்கம், வி. நளாயினி, எஸ். நந்தினி, ரி. நந்தினி, எஸ். நந்தினி, என். நர்மதா, என். நந்தினி, என். நாகேஸ்வரி , எஸ். நெடுஞ்சேரலாதன், எஸ். நித்தியரூபி, பி. பகிரதன், எம். பரந்தாமன் , ரி. பார்த்தீபன், ரி. பத்மலோஜினி ,ரி. பிறேமலதா, ஆர். பிரியதர்ஷினி, ஜி. பிறேமலதா, சி. புவனேஸ்வரி , ஆர். ரகுராஜன், கே. ராஜமோகன் , என். ரஜனி, என். ரூபினி , ஆர். ராஜபவன், என். ரமணி, என். இராசலிங்கம், ஆர். இரட்ணபாலன் , ரவிச்சந்திரன், ரி. சசிகலா, எஸ். சசிரேகா, யு. சசிதரன், வை. சசிதரன், எஸ். சிவமணி, டி. சிவவேணி, எம். சிவானி, எஸ். ரமணன் , எஸ். சிவலோஜினி, ரி. சியாமளா, எஸ். சிறிபிரிந்திரன், எஸ். சிறிகிஷ்ணாநந்தன், எஸ். சுபாஜினி , ஆர். சுபாஜினி, எம். சசிதேவி, கே. சயந்தினி , கே. சயந்தநாதன் ,பி. சாந்தினி, எஸ். செந்துமதி, எஸ். இராஜமனோகரி, எஸ். சில்லா, எஸ். சிவகாமசுந்தரி , கே. சிவாஜினி,கே. சிவஞானம் , எஸ். சிவகௌரி ,வி. சிவலிங்கம், ரி. சிவமதி, ஜே. ஆன்மேரி சுபோதினி ,கே. சுகந்தினி, எஸ். சுகந்தினி ,ரி. சுகுனா, கே. சுஜாதா, ரி. சுகந்தினி, எஸ். சுதாகரன் ,பி. சுமதி ,வி. சறோஜினி ,எஸ். நிகால்சுரேன்குமார்,பி. தினேஸ்குமார்,எஸ். சுதர்சினி, ஏ. யாவினி,ஏ. யசோதா, ஏ. கிருபைநாயகம்,ரி. பகீரதி, எஸ். சிவாஜினி, ஆர். வசிஹரன், எஸ். குமுதா, எஸ். சசிதா, வி. சுதர்ஷினி, பி. வசந்தினி, கே. விஜயரூபி, ரி. தர்ஜினி, கே. தேவிமலர், வி. துஷ்யந்தன், எஸ். உதயமதி , ஜி. வாகினி, திருமதி. வி. கதிர்காமலிங்கம், கே. வனிதா, வி. வாசுகி, எஸ். விஜி, வி. விமலேஸ்வரன் , எஸ். வின்ஷன்ராஜ் , ரி. விஜயகலா, ரி. விவேகானந்தி, ஆர். விஜிதா, ரி. விஜயசங்கர், ஆர். யசோதினி, ரி. கணேஷநாதன், எஸ். சுபாஜினி, ஐ. செபமாலைகுருசு, எஸ். சிவநாதன்

(மிகுதி நாளை)

## தமிழ் காங்கிரஸ் செயற்குழு கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் செயற்குழுக் கூட்டம் 6ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப3 மணிக்கு பருத்தித்துறை வின்சென்ற் டிபோல் இல்லத்தில் நடைபெறவுள்ளது. யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி தலைமையில் இக் கூட்டம் நடைபெறும்.

## மானிப்பாயில் முத்தமிழ் விழா

(இணுவில்)

மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையின் முத்தமிழ் விழா இன்று நடைபெறவுள்ளது.

செல்வன்.தி.நிரோஜன் தலைமையில் நடைபெறும் இவ் விழாவிற்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறையைச் சேர்ந்த கலாநிதி. எஸ்.சிவலிங்கராசாவும் சிறப்பு விருந்தினராக மரபுக் கலைஞானி செல்லையா மெற்றாஸ் மயிலும் கலந்து சிறப்பிப்பர்.

## லயனல் பலகல்ல கூட்டுப்படை தளகர்த்தர்

### இராணுவ தளபதியாக குணவர்தனா?

(கொழும்பு)

இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் லயனல் பலகல்லவுக்கு அரசு புதிதாக உருவாக்க உத்தேசித்துள்ள கூட்டுப்படை தளகர்த்தர் பதவி கிடைக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. புதிய இராணுவத் தளபதியாக மேஜர். ஜெனரல் குணவர்தனா நியமிக்கப்படும் வாய்ப்புக்களும் காணப்படுகின்றன.

இராணுவத் தலைமையில் மேற்கொள்ளப்படவுள்ள இந்த மாற்றங்கள் குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முப்படைத் தளபதியும் ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்கவுக்கு அறிவித்துள்ளார்.

போர் அற்ற காலப்பகுதியில் படையினரின் நலன்களையும் அவர்களது பயிற்சி மற்றும் அத்தோடு தொடர்பான நடவடிக்கைகளையும் மேற்பார்வையிடுவதே புதிய கூட்டுப்படைத் தளகர்த்தராக நியமிக்கப்படவுள்ள ஜெனரல்பலகல்லவின் செயற்பாடாக அமையும் என கருதப்படுகின்றது.

## யாழ்.பல்கலைக்கழக ஊழியர்கள் இன்று அடையாளவேலை நிறுத்தம்

### களனி பல்கலை ஊழியர்களுக்கு ஆதரவு தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் இன்று ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளது.

களனிப் பல்கலைக்கழக அழகியற் கல்விப் பிரிவு ஊழியர்கள் 59நாட்களாக மேற்கொண்டு வரும் வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கும் முகமாக தாங்களும் அடையாள வேலை நிறுத்தத்தை மேற்கொள்வதாக யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம் அறிவித்துள்ளது.

இன்று அனைத்துப் பல்கலைக் கழகங்களின் ஊழியர் தொழிற் சங்கங்களும் ஒருநாள் அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபடவுள்ளன.

பல்கலைக்கழக ஊழியர் சங்க அங்கத்தவர்கள் அனைவரையும் இன்று காலை 9மணிக்கு இராமநாதன் மண்டப முன்றலில் கூடுமாறு மேற்படி சங்கம் தமது உறுப்பினர்களுக்கு அறிவித்துள்ளது.

## மோட்டார் சைக்கிள் விபத்து இளைஞர் ஒருவர் காயம்

### சுன்னாகம் – அச்சுவேலி வீதியில் சம்பவம்

(ஆவரங்கால்)

நேற்றைய தினம் சுன்னாகத்தில் இருந்து அச்சுவேலி நோக்கிச் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் காயமடைந்தார்.

இச்சம்பவத்தில் மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்றவரான அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த மகாலிங்கம்-விஜயராஜ் (வயது20) என்பவர் காயமடைந்தார்.

காயமடைந்தவர் அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

லாலா சோப் ஸ்தாபனத்தாரின் நல்வாழ்த்துக்கள்

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதமான ஈழநாட்டின் வழியில் நமது ஈழநாடாக மலர்ந்தமை கண்டு மகிழ்கின்றோம். எமது ஸ்தாபனத்தின் விளம்பரங்களை பிரசுரித்து எமது ஸ்தாபன வளர்ச்சியில் பெரும் பங்காற்றிய ஈழநாட்டின் பாதையில் நமது ஈழநாடு யாழ்.மண்ணில் பிரகாசத்துடன் வெளிவருவதற்கு எமது நன்றி கலந்த பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றோம்.

வாழ்க நமது ஈழநாடு!
வளர்க அதன் பணி!!

லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி.

(சி-026)

பெண்களுக்காக சிநேகிதியே...!
அறிவின் ஊற்றாய் மாணவர் மலர்
தாச்சிமுதல் கிரிக்கெட் வரை
ஊரெழுமுதல் உலகு வரை
விளையாட்டு அரங்கம்
உலகின் எட்டுத் திக்கிலிருந்தும்
அதிரடித் தகவல்கள்
சந்தை நிலைவரத்திற்கு
தொழில்மலர்
கும்மாளமிடும் உங்கள் வீட்டுச் சுட்டிகளுக்கு
சிறுவர் அரங்கம்
நாள்தோறும் பலன் சொல்லும்
இன்றைய நாள் இனியநாள்
கடக்கட உள்நாட்டுச் செய்திகள்
காதல் புதில் கல்லூரிகள்வரை
முத்திரச் சித்திரம், பல்சுவை அரங்கம்
குளிர்மைதரும் நிலவின் ஒளியாய்
இலக்கியச்சோலை
ஒவ்வொரு தினமும் ஒவ்வொரு சிறப்பிதழ்
இரண்டு பக்கங்கள் நிறைய
பலதையும் ஆராயும்
விஹாரி விருந்தினர் பக்கம்
எல்லாவற்றையும் தரும் ஒரேயொரு பத்திரிகை
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்
நமது ஈழநாடு

யாழ்.மண்ணில் முதன்முதலாக கீஸ்ட் (Kiisst) உற்பத்தி
நிறுவனத்தின் உன்னத தயாரிப்பு
KIISST JAM
MANUFACTURED BY KIISST FOOD MANUFACTURES
அதி உன்னத தரம், சுவை, நீண்டகால தன்மை அடிப்படையில் இயற்கைப் பழங்களிலிருந்து தயாரிக்கப்படுகின்றது.
உங்கள் வசதித் தன்மைக்கேற்ப, நியாயவிலை, வேறுபட்ட நிறைகளில் பிளாஸ்ரிக் கப்களிலும், போத்தல்களிலும் எங்கும் கிடைக்கிறது.
எமது தயாரிப்புகளாவன
STRAWBERRY JAM
WOOD APPLE JAM
PINE APPLE JAM
MIXED FRUIT JAM
போத்தலினை மீளளித்து சேமியுங்கள் 5/-
ஆரோக்கிய வாழ்வின் இயற்கை சுவை KIIST
உற்பத்தி செய்து சந்தைப்படுத்துவோர்
KIISST FOOD MANUFACTURES
55,Old Park road,
JAFFNA.
(சி-025)

# அமெரிக்காவின் உதவியுடன் விமானப் பயிற்சி நிலையம்!

## அம்பாந்தோட்டையில் அமைக்கப்படுகிறது

(கொழும்பு)

அம்பாந்தோட்டையில் அமெரிக்காவுடன் இணைந்து விமானப் பழுதுபார்ப்பு பயிற்சி நிலையம் ஒன்றை ஆரம்பிக்க தென் மாகாண அபிவிருத்தி அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கின்றது.

அம்பாந்தோட்டையில் உள்ள விமானப் படைத் தளத்துடன் இணைந்ததாக இந்தப் பயிற்சி நிலையம் அமையவுள்ளது. முதற்கட்டமாக இதற்கு பதினமூன்று இலட்சம் அமெரிக்க டொலர் செலவிடப்படுமென தென்மாகாண அபிவிருத்தி அமைச்சர் ஆனந்த குலரட்ண தெரிவித்துள்ளார்.

அத்துடன் இத்திட்டத்தினால் ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பினை வழங்க முடியுமென்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் "நற் எவியேசன் ஒப் யூ.எஸ்.ஏ." என்ற நிறுவனத்துடன் இணைந்து இப்பயிற்சி நிலையம் அமைக்கப்படும்.

இப்பயிற்சி நிலையத்தின் மூலம் விமானப் பராமரிப்பு, விமான உதிரிப் பாகங்கள் உற்பத்தி, உள்நாட்டு விமான உட்கட்டமைப்பு விருத்தி, விமான தொழில்நுட்ப விருத்தி ஆகியன தொடர்பான பணிகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரியவருகின்றது.

அத்துடன் இப்பயிற்சி, பழுதுபார்ப்பு நிலையத்துடன் இணைந்ததாக சர்வதேச விமானப் போக்குவரத்துச் சேவைகளை ஆரம்பிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## மத்திய கல்லூரியில் இலவச கணனிப்பயிற்சி

யாழ். மத்திய கல்லூரியின் முறைசாராக் கல்விப்பிரிவினால் இலவச கணனிப் பயிற்சிநெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பாடசாலையை விட்டு வெளியேறிய சகல வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்கும் இக்கணனிப் பயிற்சிநெறி நாளை ஆரம்பமாகவுள்ளது.

## மலேரியா தடுப்புப் பிரசாரம்

(மந்துவில்)

தென்மராட்சிப் பிரதேசத்தில் மலேரியா நோய் அதிகரித்து வருவதனால் மலேரியா ஒழிப்புப் பிரிவினர் கிராமங்கள்தோறும் சென்று மலேரியா நோயினால் பாதிக்கப்பட்டவர்களை இனங்கண்டு அவர்களிற்கு மலேரியாத் தடுப்பு மருந்தினை வழங்கிவருகின்றனர். (28)

# யாழ். அரசாங்க அதிகாரிகளின் திறனை அதிகரிக்க புதிய திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் செயற்படும் அரச திணைக்களங்களின் வினைத்திறனை அதிகரிப்பதற்கு விசேட திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

வட-கிழக்கு மாகாண ஆளுநரின் செயலகம் இவ்விடயம் தொடர்பாக பொருத்தமான செயற்திட்டம் ஒன்றைத் தயாரித்து வருகின்றது. மிக விரைவில் இச்செயற்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

அரச திணைக்களங்களில் கடமையாற்றும் பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கான விசேட செயலமர்வு ஒன்று அண்மையில் யாழ்.செயலகத்தில் நடைபெற்றது.

இச்செயலமர்வில் வட-கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் கலந்துகொண்டிருந்தார். தற்போது யாழ்.மாவட்டத்தில் உள்ள அரச திணைக்களங்களில் வினைத்திறன் குறைவாக இருப்பதற்கான காரணங்கள் குறித்து இச்செயலமர்வில் விரிவாக ஆராயப்பட்டது.

அலுவலக முகாமைத்துவத்தில் புதிய நடைமுறைகளை அறிமுகப்படுத்துதல், அதிகாரிகளின் சேவையாற்றும் மனோநிலையை விருத்தி செய்தல், நேர முகாமைத்துவம் போன்ற பல விடயங்களை உள்ளடக்கியதாக மேற்படி புதிய செயற்திட்டம் அமையும் என்று தெரிவிக்கப்பட்டது. (க)

# தியாகி திலீபன் இல்லத்துக்கு வரும் தென்பகுதி மக்கள்!

(ஊரெழு)

ஊரெழுவில் உள்ள தியாகி திலீபன் இல்லத்தை தென்னிலங்கையில் இருந்துவரும் சுற்றுலாப் பயணிகள் பார்வையிட்டு செல்கின்றனர். கடந்த வாரம் தியாகதீபம் லெப்டினன்ட் கேணல் திலீபனின் 15ஆவது ஆண்டு நினைவுகள் கொண்டாட்டம் இடம்பெற்றதை அடுத்தே மேற்படி இல்லத்துக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் தொகை அதிகரித்துள்ளது.(96)

# குடாநாட்டுக்கு கொண்டுவரப்படும் தென்பகுதிச் செங்கற்கள்!

(யாழ்ப்பாணம்)

தென்பகுதியில் இருந்து செங்கட்டிகளை யாழ். குடாநாட்டுக்கு எடுத்துவருவதில் தற்போது பலர் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் சீமெந்தினால் தயாரிக்கப்படும் கொங்கிறீட் கற்களை விட மிகக் குறைந்த விலையில் உயர்ரகமான செங்கட்டிகளைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளது. தென்பகுதியிலிருந்து குடாநாட்டுக்கு இவற்றை எடுத்து வருவதற்கான போக்குவரத்துச் செலவைக் கணக்கில் எடுத்தாலும்கூட செங்கட்டியை கொள்வனவு செய்து பயன்படுத்துவது மிகவும் இலாபகரமாகவே உள்ளது. இதனால் அனேகமானோர் இவ்விடயத்தில் அதிகம் ஆர்வம் செலுத்தி வருகின்றனர். (க)

# யாழ். பிரதேச செயலகப் பிரிவில் மீளக் குடியமர்ந்தோருக்கு ரூ.2000!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பிரதேச செயலகப் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து சென்று மீளக்குடியமரும் குடும்பங்களுக்கு தலா இரண்டாயிரம் ரூபா மீளக்குடியமரும் நிதியாக வழங்கப்படவுள்ளதாக பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த காலங்களில் நாட்டில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக வன்னி உட்பட பல்வேறு இடங்களுக்கும் இடம்பெயர்ந்து சென்று மீளவும் தற்போது குடியேறிவரும் மக்களுக்கே இந்நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

தற்போது யாழ். பிரதேச செயலகப் பகுதியில் மீளக்குடியேறியுள்ள 1142 குடும்பங்களுக்கே தலா இரண்டாயிரம் ரூபா வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(கோ)

# மல்லாகத்தில் மிதிவெடிகள்! அச்சத்துடன் நடமாடும் மக்கள்!!

(மல்லாகம்)

மல்லாகம் டிப்போ வீதியில் மக்கள் பெருகிவாழும் பிரதேசங்கள் பல வருடங்களாக மிதிவெடிகள் அகற்றப்படாத நிலையில் உள்ளன. இதனால் அப்பகுதி மக்கள் பெரும் அச்சத்துடனேயே நடமாடிவருகின்றனர்.

மேற்படி பிரதேசத்தில் மிதிவெடிகள் அகற்றப்பட்டதாக இராணுவத்தினர் கூறி வருகின்றபோதிலும் இதுவரை 7 பேர் கால்களையும், ஒருவர் கையையும் இழந்துள்ளார்.

இதுசம்பந்தமாக கிராமிய அலுவலர் மற்றும் பிரதேச செயலாளர் ஆகியோரிடம் முறையிட்டிருந்தபோதிலும் மிதிவெடிகளை அகற்றுவதற்கு எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட வில்லை என்று அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (64)

## வடமராட்சி கல்வி வலய

# தியாகி திலீபன் நினைவு நாள் போட்டி முடிவுகள் வெளியாகின!

(வடமராட்சி)

லெப்டினன்ட் கேணல் திலீபனின் 15ஆவது ஆண்டு நினைவையொட்டி திலீபன் ஞாபகார்த்தக் குழுவினால் வடமராட்சி கல்வி வலய பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்ட இலக்கியப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுடைய விபரம் கல்வித்திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

க.பொ.த. சாதாரணதர, உயர்தர மாணவர்களிடையே நடாத்தப்பட்ட கவிதை, பேச்சு, கட்டுரை, சதுரங்கப் போட்டிகளில் முதல் மூன்று இடத்தைப் பெற்றவர்களின் விபரங்கள் வருமாறு:-

**கவிதைப் போட்டி**
**தரம் 10, 11**

1ஆம் இடம்: இ.சௌமியா - வடமத்திய மகளிர் கல்லூரி, தெ.இ. லோகதாரணி வடமத்திய மகளிர் கல்லூரி.

2ஆம் இடம்: ம.பிரசாந் - உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி

3ஆம் இடம்: சி.கௌசல்யா - மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.

**கவிதைப்போட்டி**
**தரம் 12, 13**

1ஆம் இடம்: த.அஜந்தகுமார் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.

2ஆம் இடம்: சே.துஷியா - வட இந்து மகளிர் கல்லூரி.

3ஆம் இடம்: த.சங்கீதா - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, ம.கோகுலவாணி - உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன்.

**பேச்சுப்போட்டி**
**தரம் - 10, 11**

1ஆம் இடம்: ஜெ.இந்துஷா - வல்வை மகளிர் மகா வித்தியாலயம். இ.தக்ஷிக்கா - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

2ஆம் இடம்: செ.பிரதீபா - விக்னேஸ்வராக் கல்லூரி.

3ஆம் இடம்: இ.ரட்ணாதேவி - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

**பேச்சுப் போட்டி**
**தரம் - 12, 13**

1ஆம் இடம்: ச.சசிகுமார் - விக்னேஸ்வரா கல்லூரி.

2ஆம் இடம்: அ.பகீரதன் - வேலாயுதம் மகாவித்தியாலயம்.

3ஆம் இடம்: கி.சாமந்தி - ஞானசாரியார் கல்லூரி.

**கட்டுரைப் போட்டி**
**தரம் 10,11**

1ஆம் இடம்: கு.அபிமாறன் - உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன்

2ஆம் இடம்: ஞா.தாரணி - வட இந்துமகளிர் கல்லூரி

3ஆம் இடம்: ரா.கீர்த்தனா - வட மத்திய கல்லூரி

**கட்டுரைப்போட்டி**
**தரம் 12,13**

1ஆம் இடம்: ச.ரேணுகா - மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.

2ஆம் இடம்: ச.மணிவண்ணன்- வேலாயுதம் மகாவித்தியாலயம்

3ஆம் இடம்: அ.சிந்துஜா - உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன்

**சதுரங்கப்போட்டி**
**தரம் 10,11ஆண்**

1ஆம் இடம்: வே.ரமணன் -கரணவாய் மகாவித்தியாலயம்.

2ஆம் இடம்: இ.சுகிந்திரன் -கரணவாய் மகாவித்தியாலயம்.

3ஆம் இடம்: எஸ்.சுபிக்காந் - கரணவாய் மகா வித்தியாலயம்.

**சதுரங்கப்போட்டி**
**தரம் 10,11 பெண்**

1ஆம் இடம்: ஆ.சுபாங்கி - மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.

2ஆம் இடம்: எஸ்.மாதங்கி - வட மத்திய மகளிர் கல்லூரி

3ஆம் இடம்: நா.பிருந்தா -கரணவாய் மகாவித்தியாலயம்

**சதுரங்கப்போட்டி**
**தரம் 12, 13 ஆண்**

1ஆம் இடம்: ச.கேசவன் - விக்னேஸ்வரா கல்லூரி

2ஆம் இடம்: பு.ரவிமோகன் - நெல்லியடி ம.ம.வித்.

3ஆம் இடம்: சி.கரன் - விக்னேஸ்வரா கல்லூரி

**சதுரங்கப்போட்டி**
**தரம் 12,13 பெண்**

1ஆம் இடம்: வே.கல்பனா - நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்

2ஆம் இடம்: ஆ.துஷியந்தி - விக்னேஸ்வரா கல்லூரி

3ஆம் இடம்: கே.சோபனா - நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்

இவர்களுக்கான பரிசில்களை வழங்குவதற்கான நடவடிக்கையினை ஞாபகார்த்தக் குழுவும், கல்வித் திணைக்களமும் மேற்கொண்டுள்ளன. (23)

## திணைக்களங்களின் மொழி பெயர்ப்பாளருக்கு பதவி உயர்வு

(யாழ்ப்பாணம்)

அரச திணைக்களங்களில் தற்போது பணிபுரியும் அனைத்து மொழி பெயர்ப்பாளர்கள் பதவிநிலை உத்தியோகத்தர்களாக பதவி உயர்த்தப்படவுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக அனைத்து திணைக்களத் தலைவர்களுக்கு சுற்றுநிருபம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இச்சுற்றுநிருபத்தின் பிரகாரம் திணைக்களங்களில் பணியாற்றும் ஏனைய பதவிநிலை உத்தியோகத்தர்களுக்குரிய வசதிகளும் இவர்களுக்கும் கிடைக்க இருக்கிறது.

# சாரதி அனுமதிப்பத்திர விண்ணப்பம் அடுத்த வாரம் விநியோகிக்கப்படும்

(பண்டத்தரிப்பு)

சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்கான விண்ணப்பப்படிவம் இம்மாதம் 7ஆம் திகதி முதல் விநியோகிக்கப்படவுள்ளது.

ஏற்கனவே அனுமதிப்பத்திரம் பெற விண்ணப்பித்தவர்களுக்கான எழுத்துப் பரீட்சையும், செயன்முறைப் பரீட்சையும் எதிர்வரும் 4ஆம் திகதி தொடக்கம் நடைபெறவுள்ளது. இதற்காக கொழும்பிலிருந்து 4 அதிகாரிகள் வருகை தந்துள்ளனர்.

அதேவேளை ஏற்கனவே வழங்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் கடந்த 29ஆம் திகதி முதல் ஏற்றுக்கொள்ளப்பட்டுவருகிறது. அடுத்த பரீட்சைகள் இம்மாதம் 12ஆம் திகதி தொடக்கம் 15ஆம் திகதி வரை நடைபெறும் எனவும் சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரியொருவர் தெரிவித்தார்.

(43)

## பொலிஸ் மா அதிபர் நியமனம்

# அரசியல் அமைப்பு சபைக்கு ஜனாதிபதி சந்திரிகா விளக்கம்

(கொழும்பு நிருபர்)

பொலிஸ் மா அதிபராக ஆனந்த ராஜா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவினால் நியமிக்கப்பட்டதை ஆட்சேபித்து அரசியலமைப்புச் சபைக்கு செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு ஜனாதிபதி சார்பில் விளக்கமான பதில் அனுப்பப்பட்டுள்ளது.

ஆனந்தராஜா பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டதை ஆட்சேபித்து பிரதிப்பொலிஸ் மா அதிபர் கொட்டகதெனிய அரசியலமைப்பு சபைக்கு முறைப்பாடு செய்திருந்தார்.

இந்த மனுத் தொடர்பாக ஜனாதிபதியிடம் இருந்து அரசியலமைப்பு சபை விளக்கம் கோரியிருந்தது. அரசியலமைப்பு சபை கேட்டுக் கொண்டதற்கிணங்க ஆனந்தராஜாவை பொலிஸ் மா அதிபராக நியமித்ததற்குரிய நியாயங்களை ஜனாதிபதி இக் கடிதத்தில் விளக்கியிருப்பதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

## இடைக்காடு ம.விக்கு பழைய மாணவர் நிதி உதவி

(இடைக்காடு)

போர் நடவடிக்கைகளினால் பெரிதும் பாதிக்கப்பட்ட இடைக்காடு மகா வித்தியாலயத்திற்கு புலம்பெயர்ந்து வாழும் அதன் பழைய மாணவர்கள் நிதியுதவி வழங்கியுள்ளனர். இந்நிதிமூலம் பாடசாலைக்கு காணி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்றுவருகின்றன. (76)

## மரங்கள் அழிப்பு

(கைதடி)

கைதடி - கோப்பாய் வீதியோரத்தில் உள்ள உவர்நில மரங்கள் விறகிற்காக வெட்டப்பட்டு வருகின்றன. சில ஆண்டுகளுக்கு முன் மர நடுகை திட்டத்தின் கீழ் நடப்பட்ட இம்மரங்கள் இவ்வாறு அழிக்கப்படுவது குறித்து இப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (31)

# இஸ்ரேல் - பலஸ்தீன வன்முறைகளில் இரு வருடங்களில் 320 சிறுவர்கள் பலி!

## இரு தரப்பு மீதும் சர்வதேச மன்னிப்புச்சபை கண்டனம்



இஸ்ரேலிய டாங்கி ஒன்றின் முன்பாகப் பலவந்தமாகப் படுக்க வைக்கப்பட்டிருக்கும் பலஸ்தீனர்கள்.

### ஈராக்கிய சிறுவர் பாடசாலைகளும் சோதனையில்?

[illegible] களுக்குமிடையில் வியன்னாவில் நடைபெறும் பேச்சுவார்த்தைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து செய்திகளை வெளியிடுவோரை ஈராக்கின் செய்தி ஊடகங்கள் தவிர்த்து வருகின்றன என்று ஈராக்கிய பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஐரோப்பிய செய்தி ஸ்தாபனம் ஒன்றிற்கு தகவல் வெளியிட்டுள்ளார்.

ஆயுதப் பரிசோதகர்கள் சதாமின் மாளிகையை மட்டுமல்ல சிறுவர் பாடசாலைகளிலும் தமது சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்று ஏளனமாக அந்தப் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.




காஷ்மீரில் தயார்நிலையில் இருக்கும் இந்தியப் படை வீரர்.



வட ஈராக் நகரொன்றில் சதாமின் ஆட்சியைக் கொண்டாடும் ஈராக்கியர்கள்.

# ஈழத் தமிழரின் விடியலுக்கான வெளிச்சம் பிரகாசமாக தெரிகிறது

## ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ

(தமிழ்நாடு)

ஜெயலலிதாவின் ஆட்சி மக்களுக்குக் கிடைத்த பெரும் சாபக்கேடு என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட போது செய்தியாளர்களிடம் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - ஈழத்தமிழரின் பிரச்சினைக்கு நல்ல விடிவு கிடைக்கும் என்ற நம்பிக்கையோடுதான் தாம் இருப்பதாகவும் ஈழத் தமிழரின் விடியலுக்கான வெளிச்சம் பிரகாசமாகத் தெரிவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இங்கு நடைபெறும் சர்வதேச ஆட்டத்திற்கு விரைவில் வர்ணனையாளராக வருவேன்!

## யாழ். வந்த ரொனி கிறேக் நமது ஈழநாட்டுக்குப் பேட்டி

(உமேஷ்)

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும் பிரபல கிரிக்கெட் வர்ணணையாளருமான ரொனி கிறேக், அவரது மகள், பிரபல இலங்கைக் கிரிக்கெட் வீரரான ரொமேஷ் களுவிதாரண ஆகியோர் நேற்று யாழ்ப்பாணம் விஜயம் செய்தனர்.

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு, யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் சிறந்த இளம் கிரிக்கெட் வீரர்களை தெரிவு செய்து பரிசில்கள் வழங்குமுகமாக அவர்கள் இங்கு வந்திருந்தனர்.

பிறப்பிலே தென்னாபிரிக்கரான ரொனி கிறேக் இங்கிலாந்து கிரிக்கெட் அணியில் திறம்பட விளையாடியவர்.

தற்போது அவுஸ்ரேலியாவில் வசித்து வரும் அவர் - உலகெங்கும் நடைபெறும் கிரிக்கெட் போட்டிகளுக்கு வர்ணணையாளராக கடமையாற்றி வருகின்றார்.

யாழ்.துரையப்பா விளையாட்டரங்குக்கு நேற்று அவர் வந்தபோது - 'நமது ஈழநாடு' பத்திரிகைக்கு சிறப்பு பேட்டியையும் வழங்கினார்.

அப்பேட்டியில் - யாழ்ப்பாணத்தில் நடைபெறும் சர்வதேச கிரிக்கெட் ஆட்டமொன்றுக்கு வர்ணணையாளராக கடமையாற்ற ஆர்வம் கொண்டுள்ளதாகக் கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்:- அவுஸ்ரேலியா அணி விரைவில் யாழ்.மாவட்ட அணியுடன் விளையாடும் என்றும் தெரிவித்தார்.

யாழ்ப்பாண கிரிக்கெட் ஆடுகளங்கள் பற்றிக் குறிப்பிட்டபோது- மைதானம் அடர்த்தியான புற்றரையாகக் காணப்படுவதும், சமப்படுத்தப்படாத நிலையிலிருப்பதும் சர்வதேச கிரிக்கெட் வீரர்கள் ஆடுவதற்கு கடினமான நிலையைத் தோற்றுவிக்கலாம் எனக் கவலை தெரிவித்தார் ரொனி கிறேக்.

கொழும்பிலுள்ள இலங்கை அணி வீரர்கள் விரைவில் யாழ். வந்து இங்குள்ள இளம் வீரர்களுக்கு பயிற்சியளிப்பதில் விருப்பம் கொண்டுள்ளதை தான் அறிந்துள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

# யாழ்.மாவட்ட கிரிக்கெட் வீரர்களால் சர்வதேச தரத்தில் விளையாட முடியும்!

## ரொமேஷ் களுவிதாரண கூறுகிறார்

(உமேஷ்)


சர்வதேச தரத்தில் விளையாடக் கூடியவர்களாக யாழ். கிரிக்கெட் வீரர்கள் உள்ளனர். அவர்கள் திறமைசாலிகள். அர்ப்பணிப்புடன் விளையாடுகின்றனர் என இலங்கை கிரிக்கெட் அணியின் விக்கெட் காப்பாளரான ரொமேஷ் களுவிதாரண நமது நிருபருக்குத் தெரிவித்தார்.

துரையப்பா விளையாட்டரங்கில் நேற்றுக்காலை நடைபெற்ற இளம் கிரிக்கெட்வீரர் தெரிவுக்காக யாழ்.வந்திருந்த அவர் நமது நிருபருடன் உரையாடும் போது இவ்வாறு கூறினார்.

யாழ் மாவட்டத்திலுள்ள இளம் கிரிக்கெட் வீரர்களுக்கு பயிற்சியளிக்க விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள பயிற்சி முகாம்களில் தானும் பங்கேற்கத் திட்டமிட்டிருப்பதாக[illegible] அவர் கூறினார்.

ஐ.சி.சி. கிண்ணம் ஒரு அணிக்கு மட்டுமே கிடைக்காமல் போனது துரதிஷ்டமே என்று தெரிவித்த அவர், மழையின் காரணமாக ஆட்டம் நிறுத்தப்பட்டாலும் இந்திய அணி தமது அணியை வென்றுவிடும் எனத்தான் கருதியிருக்க[illegible]வில்லை எனவும் களுவிதார[illegible] மேலும் தெரிவித்தார்

இளம் வீரர்கள் தெரிவும் பரிசளிப்பும் முடிந்ததன் பின்னர் அங்கு கூடியிருந்த பலருக்கும் அவர் 'ஓட்டோகிராப்' வழங்கினார்.









# மாணவர் மலர்



## க.பொ.த. (சா/த) பரீட்சைக்கான பயிற்சி வினாத்தாள்



## சமூகக்கல்வியும் வரலாறும்

தொகுப்பு:- N. விஜயகுமார் (அன்ரன்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.

1\. 1. மூன்று அபிவிருத்தி தசாப்தங்களின் காலஎல்லைகளைக் குறிப்பிடுக? (03 புள்ளிகள்)

2\. அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் நான்கு பண்புகளை உதாரணத்துடன் தருக? (04புள்ளிகள்)

3\. இலங்கையின் கைத்தொழில் விருத்தியின் புதிய போக்குகள் இரண்டைக் குறிப்பிட்டு விளக்குக? (05புள்ளிகள்)

4\. இலங்கையின் அபிவிருத்திக்குரிய தடைகள் இரண்டைக் குறிப்பிட்டு விளக்குக? (06 புள்ளிகள்)

2\. 1. மார்ஷல் திட்டம் என்றால் என்ன? (03 புள்ளிகள்)

2\. வெளிநாட்டு உதவிகள் வழங்கப்படும் முறைகள் நான்கினைக் குறிப்பிடுக? (04 புள்ளிகள்)

3\. இலங்கைக்கு வெளிநாட்டு உதவிகள் ஏன் அவசியம் என்பதற்கு இரு காரணங்களைக் குறிப்பிட்டு விளக்குக? (05 புள்ளிகள்)

4\. இலங்கைக்கு உதவி வழங்கிய சர்வதேச நிதி நிறுவனங்கள் இரண்டைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒரு நிறுவனம் இலங்கைக்கு வழங்கிய இரு உதவிகளை விளக்குக? (06 புள்ளிகள்)

3\. 1. ஐக்கிய நாடுகள் சபையின் பிரதான நோக்கங்கள் மூன்றினைக் குறிப்பிடுக? (03 புள்ளிகள்)

2\. அருகே தரப்பட்ட படத்தில் குழந்தைகளின் உரிமை மீறப்படும் ஒரு சந்தர்ப்பம் காட்டப்பட்டுள்ளது. அதுபோல் அவர்களுக்கு கிட்டாது இருக்கும் நான்கு உரிமைகளைக் குறிப்பிடுக? (04 புள்ளிகள்)



3\. படத்தில் காட்டியதுபோல் ஒரு சிறுவன் பாதிப்புக்குள்ளாகும் பட்ஷத்தில் அவனுக்கு ஏற்படும் நலக்கேடுகள் இரண்டைக் குறிப்பிட்டு விளக்குக? (05 புள்ளிகள்)

4\. ஐ.நா.சபை பிரேசில் நாட்டின் நகரமான ரியோடி ஜெனெய்ரொலில் புவியை பேணுவதற்காக ஒரு உச்சி மாநாட்டைக் கூட்டியது. அதில் நீரும்ஒரு பிரதிநிதியாக கலந்து கொண்டீர் என்றவாறு உமது மாவட்டத்தின் சுற்றாடல் காப்புக்கு ஒரு வேலைத் திட்டத்தை முன்னெடுக்க ? (06 புள்ளிகள்)

4\. 1. அகதிகளால் பெரிதும் பாதிப்படைந்த நாடுகள் மூன்றைக் குறிப்பிடுக? (03 புள்ளிகள்)



2\. படம் காட்டியதுபோலுள்ள அகதிகள் பிறிதொரு நாட்டுள் செல்லுமிடத்து அந்நாடு எதிர்கொள்ளும் பிரச்சினைகள் இரண்டைக் குறிப்பிடுக? (04புள்ளிகள்)

3\. நவீன குடும்பம் ஒன்று எதிர்கொள்ளும் சவால்கள் இரண்டைக் குறிப்பிட்டு விளக்குக? (05 புள்ளிகள்)

4\. உலக சனத்தொகைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான இரு வழிமுறைகளைக் குறிப்பிட்டு விளக்குக? (06 புள்ளிகள்)

5\. 1. பண்டைக்காலத்தில் நிலவிய ஆட்சி முறைகளிலும் சனநாயக ஆட்சி இருந்ததென்பதற்கு மூன்று சான்றுகள் தருக? (03புள்ளிகள்)

2\. சனநாயக ஆட்சியின் இயல்புகள் நான்கு தருக? (04 புள்ளிகள்)

3\. இன்றைய சமூகத்தில் சனநாயக அரசாங்கத்துக்கு விரோதமான நிகழ்வுகள் பல உள்ளன. உமது அறிவுக்கெட்டியவகையில் இத்தகைய இரண்டு சந்தர்ப்பங்களை எடுத்துக் காட்டுவதுடன் அவற்றை சரி செய்யக் கூடிய வழிவகைகள் இரண்டைக் குறிப்பிட்டு விளக்குக? (05 புள்ளிகள்)

4\. உமது கிராம அலுவலர் கடமைகளை சரிவர செய்யாவிட்டால் மக்களால் எடுக்கக் கூடிய சிறந்த நடவடிக்கைகள் இரண்டைக் குறிப்பிட்டு விளக்குக? (06 புள்ளிகள்)

---

## க.பொ.த. (சா/த) பரீட்சைக்கான பயிற்சி வினாத்தாள்



## விஞ்ஞானமும் தொழினுட்பவியலும்

தொகுப்பு:- P. சற்குணநாதன்
யா/வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தியாலயம்

எல்லா வினாக்களுக்கும் விடை தருக?

01\. அமுக்கத்தை அளப்பதற்கு பயன்படும் நியம அலகு
1. வாற்று 2. யூல் 3. பாஸ்கால் 4. நியூட்டன்

02\. இரும்பைப் பிரித்தெடுக்கும்போது ஊதுலையினுள்ளே சேர்க்கப்படும் மூலப்பொருளாக அமையாதது
1. சுண்ணாம்புக்கல் 2. கற்கரி
3. எமற்றைற்று 4. போக்சைற்று

03\. பின்வருவனவற்றில் எதில் வேகவிகிதம் ஒன்றை விடக் குறைவாக இருக்கும்
1. பாக்குவெட்டி 2. ஒற்றைச் சில்லுவண்டி
3. சோடாமூடி திறப்பான் 4. சாவணம்

04\. ஆவர்த்தன அட்டவணையில் ஒரே கூட்டத்தைச் சேர்ந்த இரு மூலக அணுக்களில்
1. நியூத்திரன்களின் எண்ணிக்கை சமம்
2. புரோத்திரன் எண்ணிக்கை சமம்
3. ஈற்றோட்டு இலத்திரன்களின் எண்ணிக்கை சமம்
4. சக்திப்படிகளின் எண்ணிக்கை சமம்

05\. $2KMnO_4 + 16 HCl \rightarrow xKCl + 2MnCl_2 + yCl_2 + zH_2O$
மேலே சமன்படுத்திய இரசாயனச் சமன்பாடுஒன்று தரப்பட்டுள்ளது. அதில் x, y, z ஆகியவற்றின் பெறுமானங்கள் முறையே
1. 8,5,2 2. 5,8,2 3. 2,5,8 4. 2,8,5

06\. தைத்தேனியம் எனும் உலோகப்பிரித்தெடுப்பில் பயன்படும் இல்மனைற்று இலங்கையில் பெருமளவில் காணப்படும் இடம் பின்வருவனவற்றுள் எது?
1. நாத்தாண்டியா 2. புல்மோட்டை
3. சேருவில 4. எப்பாவெல

07\. இலங்கையில் பெறப்படும் இரத்தினக்கற்கள் உற்பத்தியாகும் முறையில் வேறுபடும் சோடி
1. மாணிக்கம், முத்து 2. வைரம், பவளம்
3. முத்து, பவளம் 4. மரகதம், பவளம்

08\. 11400 $kg/m^3$ அடர்த்தியை உடைய $2m^3$ கனஅளவு கொண்ட ஈயக்குண்டின் நிறையை சரியாகத் தருவது
1. $\frac{11400}{2^2} \times \frac{10N}{10}$ 2. $11400 \times 2 \times 10N$
3. $\frac{11400}{10} \times 2N$ 4. $\frac{11400}{2 \times 10} N$

09\. பின்வருவனவற்றுள் கணியம் அல்லாதது எது?
1. களிமண் 2. சுண்ணாம்புக்கல்
3. கருங்கல் 4. இரத்தினக்கல்

10\. பின்வருவனவற்றுள் எக்காரணி அதிகரிக்கும்போது தாவர இலைகளில் இருந்து வளிமண்டலத்துள் விடுவிக்கப்படும் நீராவியின் அளவு குறைவடையக்கூடும்.
1. மண்ணீர் 2. வளிமண்டல ஈரலிப்பு
3. காற்றின் வேகம் 4. சூழல்வெப்பநிலை

11\. 50கி.கி உடற்திணிவுள்ள ஓட்டவீராங்கனை 2m/s எனும் வேகத்தில் ஓடிக்கொண்டிருக்கும்போது அவளது உடலில் உள்ள இயக்க சக்தி
1. 50J 2. 100J 3. 200J 4. 25J

12\. வாகனச் சாரதிகள் தமது வாகனத்துக்குப் பின்னால் பாதையின் இரு மருங்கையும் பார்ப்பதற்குப் பயன்படுத்தும் ஆடியில் தோன்றும் விம்பம் எவ்வாறுள்ளது?
1. உண்மையானது, சிறியது
2. உண்மையானது, பெரியது
3. மாயமானது, சிறியது
4. மாயமானது, பெரியது

13\. பின்வருவனவற்றில் எது இறப்பர் பால் திரட்சியடைதலைத் தூண்டுவதற்காக பயன்படுத்தப்படும்.
1. அமோனியாக்கரைசல் 2. போமல்டிசைட்டு
3. சோடியம் இருகாபனேற்று 4. போமிக்கமிலம்

14\. A எனும் மூலகம் ஐதான அமிலமொன்றுடன் தாக்கம் புரிந்து ஐதரசன் வாயுவை வெளிவிடும். B எனும் உலோகம் அந்த அமிலத்துடன் தாக்கம் புரிவதில்லை. A,B எனும் உலோகங்கள்முறையே பின்வருவனவற்றுள் எவையாக இருக்கக்கூடும்
1. மகனீசியம், நாகம் 2. மகனீசியம், செம்பு
3. செம்பு, மகனீசியம் 4. செம்பு, வெள்ளி

15\. மனிதக் குருதி சுற்றோட்டத் தொகுதியில் எந்த நாளத்தில் ஒட்சிசனேற்றப்பட்ட குருதி அடங்கியிருக்கும்
1. ஈரல் வாயிநாளம் 2. நுரையீரல் நாளம்
3. பின்பெருநாளம் 4. சிறுநீரக நாளம்

---



## க.பொ.த. (சா/த) பரீட்சைக்கான பயிற்சி வினாத்தாள்

## கணிதம்

கு. விஜயகுமார்
யா/ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி
புத்தூர்

01\. பெறுமானம் காண்க. 2.04 - 1.98

02\. $\frac{2x}{3} = 12$ எனின், x இன் பெறுமானம் யாது?

03\. பெறுமானம் காண்க. $(-3)^2 \times (-1)$.


04\. 40 தீப்பெட்டிகளின் விலை ரூபா 100 எனின் 1 தீப்பெட்டியின் விலை யாது?

05\. ஒரு பாடசாலையில் 1617 மாணவர்களும்,வேறொரு பாடசாலையில் 833 மாணவர்களும் கல்வி கற்கின்றனர். இவ்விரு பாடசாலைகளிலும் எத்தனை மாணவர்கள் கல்வி கற்கின்றனர்?

06\. x இன் 2 மடங்கில் இருந்து 5ஐக் கழிப்பதற்குரிய அட்சரகணிதக் கோவையை எழுதுக?


07\. ஓர் எண்ணை 5 ஆல் பிரிக்கும்போது ஈவு 30 உம் மீதி 2 உம் ஆயின் அவ்வெண் யாது?

08\. உருவில் உள்ள △ இன் சுற்றளவு 36 cm, AB= AC ஆகும் எனின் AB இன் நீளம் யாது?




09\. $\frac{5}{6}$ ஐ மீளும் தசமத்தில் தருக.

10\.




மேலேயுள்ள △ABC, △PQR இல் AB= PQ,BC= PR ஆகும்.இவ் இரு முக்கோணிகளும் ஒருங்கிசைவதற்கு △ ABC இற்கு சமமான கோணம் PQR இல் எதுவாகும்?

11\. X=2, Y= (-3) எனின் $\frac{3x}{2}$ + Y இன் பெறுமானத்தைக் காண்க.

12\. தீர்க்குக. $\frac{2x}{3}+x-2=8$


13\. சுருக்குக. $\frac{1 - 0.09}{1.3}$

14\. $A= \{X : 4<x \leq 16,$ x முக்கோணி எண்$\}$
மேலே Aயினால் காட்டப்படும் தொடையின் உறுப்புக்களை எழுதுக.


15\. $(x-5)(x+6)=0$ என்ற இருபடிச் சமன்பாட்டின் மூலங்களைக் காண்க.

16\. எந்த ஒரு செங்கோண முக்கோணியினதும் மிகப் பெரிய பக்கம் செம்பக்கமாகும்.
இதைக் காரணங்களுடன் உறுதிப்படுத்துக.


17\. படத்தில் உள்ள தரவுகளிற்கேற்ப (AE= EC, BD= DC ஆகும்)
△AED இன் பரப்பளவு △ ABC இன் பரப்பளவின் என்ன பின்னமாகும்.




18\. ஒரு சதுர வடிவத் தாளின் நீளம் 6cm: இத்தாளின் பரப்பளவிற்கு சமபரப்புடைய செவ்வக வடிவத் தாளின் நீளம் 9cm. அதன் அகலத்தைக் காண்க.




19\. படத்தில் AD= BD=DC ஆகும். $B\hat{A}D$ ஆனது $90^\circ$ என்பதை காரணங்களுடன் தருக.




20\. படத்தில் O மையம் AB விட்டம் ஆரை= 5cm, AC=6cm எனின் BCஇன் நீளம் யாது?

## க.பொ.த. (சா/த) பரீட்சைக்கான பயிற்சி வினாத்தாள்




### பகுதி I

கவனிக்குக

எல்லா வினாக்களுக்கும் விடை தருக

1முதல்40 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் நான்கு விடைகள் வீதம் உள்ளன. சரியான/மிகப் பொருத் தமான ஒரு விடையைத் தெரிவு செய்க.

இவ் வினாத்தாளுக்குரிய புள்ளி 40 ஆகும்.

1. பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்திற் காணப்படும் சொல் பற்றிய வினாவிற்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1) "**இரவி** தன்குலத் தெண்ணில்பல்வேந்தர்........."
இங்கு இரவி என்பதன் ஒத்த கருத்துள்ள சொல்
1.இரவு 2.சூரியன் 3.இரைதல் 4.அரசன்

2) "சிவந்த **பங்கயம்** ஒத்த செங்கண் இராமன்" இங்கு பங்கயம் என்பதன் ஒத்த சொல்
1.அயன் 2.இறைவன் 3.தாமரை 4.பொறுமை

3) "திருடர்கள் **தனவான்** வீட்டில் கன்னம் வைத்தனர்" இதில் தனவான் என்பதன் எதிர்ப்பாற் சொல்
1.தனவதை 2.தன்வாட்டி 3.தனவதி 4.தனவாள்

4) "வங்கினைப் பற்றிப்போகா வல்லுடும்பென்ன நீங்கான்" இங்கு வங்கு என்பது
1.வலிமை 2.வீரம் 3.பொந்து 4.குடுமித்தேவர்

5) பாண்டிய மன்னன் அமைத்த முத்துப்பந்தரில் புலமை மிக்க ஒளவைப் பெருமாட்டியாரும் வீற்றிருந்தார். இங்கு புலமை என்பதன் எதிர்ப்பொருள் தரும் சொல்
1.சிறுமை 2.மடமை 3.ஏழ்மை 4.கீழ்மை

2. பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

6) எல்லோருக்கும் பொதுவான சொத்துக்களை நாம் --------பாதுகாத்தல் வேண்டும்.
1.தட்டுத்தடையின்றி 2.கண்ணும்கருத்துமாய்
3.ஆற்றித் தேற்றி 4.போற்றிப்புகழ்ந்து

7) தமது அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதி போதாமையால் ஆண்டின் நடுப்பகுதியில் அமைச்சர்........ பிரேரணையொன்றினைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.
1)குறை நிரப்பு 2)மிகைச் செலவு
3)மிகைக்கொடுப்பனவு 4)பற்றாக்குறை

8) நாட்டில் காணாமற்போனோர் பற்றி விசாரிப்பதற்காக ஜனாதிபதியால் .................. நியமிக்கப்பட்டது.
1)ஆய்வுக்குழு 2)ஆணைக்குழு
3)அமைப்பாளர்குழு 4)தேடுதல்குழு

9) .............ரூபாவிற்கு ஒரு கட்டுரைப்புத்தகம் வாங்கினேன்.
1)நாப்பத்தைந்து 2)நாற்பத்தியைந்து
3)நாற்பத்தஞ்சு 4)நாற்பத்தைந்து

10) தமிழர்களின் சொத்தாகிய பண்பாடு.................என்ற போர்வையில் சிதைக்கப்படுகிறது.
1)நாகரீகம் 2)நாகறிகம் 3)நாகறீகம் 4)நாகரிகம்

3. பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

11) உடலிற் புலப்படும் உள நிகழ்ச்சி
1)மேம்பாடு 2)மந்திரம்
3)மெய்ப்பாடு 4)முரண்பாடு

12) மிளகாய்க்கு விதை என்பது போல் ஆமணக்குக்கு
1)மணி 2)பருப்பு 3)வித்து 4)முத்து

13) ஒரு நூலில் பிற்சேர்க்கையாக அமையும் பகுதி
1) அனுபந்தம் 2) பொருளடக்கம்
3) பதிப்புரை 4) சரவை

14) செய்யுட்களின் சீர்களின் முதலெழுத்து ஒன்றிவர அமைவது
1)மோனை 2)எதுகை 3)யாப்பு 4)ஓசை

15) ஆரியத்துக்கும் தமிழுக்கும் பொது எழுத்துக்களாகி விகாரமின்றித் தமிழில் வழங்கும் வடசொல்
1) இயற்சொல் 2) தற்சமச்சொல்
3) தற்பவச்சொல் 4) திசைச்சொல்

4. பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

16) நீண்ட காலம் நோய்வாய்ப்பட்டிருந்த பாலன் உருக்குலைந்து காணப்பட்டான். இதில் உருக்குலைதல் என்ற மரபுத்தொடரை உணர்த்தும் பொருள்
1) முகவாட்டம் 2) மேனிமெலிதல்
3) மனத்தளர்ச்சி 4) செயலற்றுப்போதல்

17) "பள்ளிக்கணக்கு புள்ளிக்குதவாது" என்னும் பழமொழியின் பொருள் கொண்ட இன்னொரு பழமொழி
1) சிறு பிள்ளை வேளாண்மை வீடு வந்து சேராது
2) ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
3) பானையில் இருந்தால் தானே அகப்பையில் வரும்
4) ஏட்டுச்சுரக்காய் கறிக்குதவுமா?

18) எந்தவொரு பயனுமின்றி வீணாக்கப்படுதல் என்னும் பொருள் தரும் இலக்கணத்தொடர்
1) மல்லுக்கட்டுதல் 2) கோமாளிக்கூத்து
3) கல்லில் நாருரித்தல் 4) விழலுக்கிறைத்தல்

19) நிறைவேற்ற முடியாத ஒன்றைச் செய்வதற்குத் திட்ட மிடுவதை விளக்குவதற்கு பொருத்தமான உவமைத்தொடர்
1) உமிகுற்றி கை சலித்தாற் போல்
2) ஆண்டிகள் மடம் கட்டியது போல்
3) கடன்பட்டார் நெஞ்சம் போல்
4) ஆற்றில் கரைத்த புளி போல்

20) "கேடு விளைந்த பின்னர் அதனைத் தடுக்க முயல்வது பயனில்லாத செயலாகும்" என்ற பொருள் தரும் பழமொழி
1)கண்கெட்ட பின்னரா சூரிய வணக்கம்
2)யானைவரும் பின்னே மணியோசை வரும்முன்னே
3)ஊர்வாயை மூட உலைமூடி இல்லை
4)மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கலாமா?

5. பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

21. மொழிக்கு இறுதியில் நிற்கும் ஓர் மெய் எழுத்து
1) ட 2) ழ் 3) இ 4) ச்

22. "உண்டான்" என்ற சொல்லில் உள்ள பகுபத உறுப்புக்கள்
1) பகுதி,விகுதி 2) பகுதி,விகுதி,இடைநிலை
3) பகுதி,விகுதி,இடைநிலை,சந்தி
4) பகுதி,விகுதி,இடைநிலை,சந்தி,சாரியை

23. "பூனைக்கு விளையாட்டு சுண்டெலிக்கு சீவன் போகிறது" என்னும் வாக்கியத்தின் எழுவாய்
1)போகிறது 2)பூனை 3)சீவன் 4)சுண்டெலி

24. பொற்றொடிக்கு இதயம் இல்லையா? இதில் பொற்றொடி என்பது
1)அன்மொழித்தொகை 2)வேற்றுமைத்தொகை
3)வினைத்தொகை 4)பண்புத் தொகை

25. பின்வருவனவற்றுள் ஆண்பாலுக்கும் பெண் பாலுக்கும் பொதுவான பெயர்
1)வில்லி 2)அறிவிலி 3)செவிலி 4)விறலி

26. "எல்லையில்லாததோர் வானக் கடலிடைவெண்ணிலவே..........." இங்கு அமைந்துள்ள அணி யாது?
1) உவமை 2) தற்குறிப்பேற்றம்
3) உருவகம் 4) உயர்வு நவிற்சியணி

27. "ஆதிபகவன் முதற்றே உலகு" என்னும் தொடரில் ஏகார இடைச்சொல்லின் பொருள்
1)வினாப் பொருள் 2)எதிர்மறைப்பொருள்
3)தேற்றப்பொருள் 4)பிரிநிலைப்பொருள்

28. என்னப்பா இத்துணை பெரும் சோதனையா? என்னும் தொடரில் "அப்பா" உணர்த்தும் பொருள்
1)அதிசயம் 2)இரக்கம் 3)ஐயம் 4)இகழ்ச்சி

29. ஞானம் + உதயம் என்பதை சேர்த்து எழுதினால்
1)ஞானஉதயம் 2)ஞானோதயம்
3)ஞானாதயம் 4)ஞானமே உதயம்

30. நச்சுப்பாம்பை நல்ல பாம்பு எனக்கூறல்
1)தகுதி வழக்கு 2)இயல்புவழக்கு
3)இலக்கணப்போலி 4)மரூஉ

**அன்பிற்கினிய மாணவச் செல்வங்களே!**
**ஆசிரியப்பெருந்தகைகளே!**

**மாணவர் மலர் எனும் இப்பகுதி
உங்களுக்காகவே படைக்கப்படுகின்றது.
மாணவர்களே இது தொடர்பான
உங்கள்
அபிப்பிராயங்களை எமக்கு
அறியத்தாருங்கள்.**

**ஆசிரியர்களுக்கு அன்பான வேண்டுகோள்!
மாணவர்களுக்கு தேவையான
பரீட்சைத்தாள் மாதிரிகள், ஆக்கங்கள், அறிவுரைகள்,
வழிகாட்டல் குறிப்புகள் என்பவற்றை எமக்கு
தாராளமாக
அனுப்பி வைக்கலாம்.
உங்கள் ஒத்துழைப்பே இம் மலரின் வளர்ச்சிக்கு
உதவும்.**

**மாணவர் மலர்
நமது ஈழநாடு
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்**

---




Answer all the questions on this paper itself

1. Use the words given below and fill in th blanks.

On at of by before
in to from into along

1. Suman returned from school and placed his books ..............................the table.
2. The gardener planted the cuttings of roses...............................the fence.
3. Last Monday a father ................................ three children was killed in accident.
4. A famous poet translated a number of English poetries ................Tamil.
5. My grand father used to take multi vitamin tablets............... going to bed.
6. An owner of a bookshop in Jaffna imported a number of books ..............India.
7. Amith usually gets up from bed .................5 'O' clock every day.
8. My neighbour sends both of his children ..............a private school in the town.
9. My friend was born ..................1962.
10. They will travel to Colombo ............train.

2. Study the picture and fill in the blanks in the next given below.



There are three people in this picture One is a ................................ and the other two are men. One of the men is'............................... in a chair and the other one is moving on a..................................He is a ................................and he is delivering letters. The man sitting in the chair has a .......................in his hand. He is ................................ it. The boy ..........................Walking towards the man. He is bringing a ...............................in his hand. The postman is wearing a ...................., on his head and the other man is wearing a .........................and sarong.

3) Fill in the blanks in the following conversation.
(1) Take part (3) Win (5) hard (7) in (9) for
(2) usual (4) So (6) you (8) were (10) On

Father:- Suthan, where were ..................... in the evening?
Suthan:- I was ..................the playground father.
Father :- ...........................you playing there?
Suthan:- I was practicing my school sports meet.
Father:- When is your sports meet?
Suthan:- It is ............... the 24th of next month.
Father:- In which events are you going to .........
Suthan:- As ................... I'm taking part in 2x400 race put shot throw and long jump.
Father:- Can you ................ all the three events practicing.
Suthan:- I hope ................. father. That's why I'm practicing ....................

4. Use the informations given below about Mr.S.V. Kumaran and write a short paragraph about him.
Name:- S.V.Kumaran.
Age:- 32 Years.
Height 150 cm. Complexion- dark.
Occupation- Chief clerk.
Place of work- Municipal Council - Jaffna.
Address - No.27, Sivan Veethi, Nallur.
Marital Stutus - Married.
Name of spouse - Mrs. Malarvili.
Children - 2 boys.
Interests - Watching T.V, playing Chess.

ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225108 www.eezhanadu.com

சிந்தனைக்கு
உன்னுள்ள ஏழைகளுக்குப் போக்க
உன்னில் நீ உண்மையாளனாக இரு!
- தோமஸ் ஜொனல்ட்

# நமது நோக்கு

## பணையில் ஏறேன் கொட்ட தென்னைக்கா நோவென்னமா?

கடந்த இரண்டு தசாப்தங்களாக இலங்கைத் தீவின் வடக்கு - கிழக்குப் பகுதி சந்தித்த போரின் கோர விளைவுகள் வார்த்தைகளில் விபரித்துவிட முடியா தவை.

தொடர்ச்சியான இராணுவ நடவடிக்கைகளாலும், கண்மூடித்தனமான விமான, எறிகணைத் தாக்குதல்களாலும் தமிழ் மண்ணில் ஆழமாகப் பதிந்துவிட்ட வடுக்கள் இலகுவில் அகன்றுவிடப் போவதுமில்லை.

தமிழ் மக்களின் உயிர்களையும் உடமைகளையும் பாரதூரமாகப் பாதித்துவிட்ட போரின் தாக்கங்களிலிருந்து - மக்களை மீட்டெடுத்து, அவர்கள் தத்தம் சொந்த இடங்களில் மீளக்குடியமரவும், அவர்கள் தமது இயல்பான வாழ்க்கைக்குத் திரும்பும் வகையில் புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளை வேகமாக முன்னெடுக்கவும் வேண்டிய அவசியமான கடமைகள் ஏராளமாகக் காத்திருக்கின்றன.

இந்த பணிகளுக்கு பெருந்தொகையான நிதியுதவி தேவைப்படும் நிலையில் - பல நாட்டு அரசாங்கங்களும், மனிதநேய அமைப்புக்களும் தாமாக முன்வந்து உதவி செய்யத் தயாரென அறிவித்து வருகின்றன. அரசாங்கத் தரப்பையும் விடுதலைப் புலிகளையும் நேரடியாகச் சந்தித்து தமது உதவும் விருப்பை அவை வெளிக்காட்டியும் வருகின்றன.

அதேவேளை - அண்மையில் நடந்து முடிந்த தாய்லாந்துப் பேச்சுக்களின் அடிப்படையில் - இத்தகைய நிதியுதவிகளை அரசாங்க தரப்பும், விடுதலைப் புலிகளும் இணைந்து கோரிப் பெற்றுக் கொள்வர் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இவ்வாறான சூழலில் - வடக்கு, கிழக்கில் யுத்தத்திற்குப் பிந்திய புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் மீள்குடியேற்றத் திட்டங்களுக்கென வெளிநாடுகளிலிருந்து பெறப்படும் நிதியுதவியை - நாட்டின் ஏனைய பகுதிகளின் அபிவிருத்திக்குமெனப் பகிர்ந்து கொள்ளும் யோசனை அரசாங்கத் தரப்பில் கலந்துரையாடப்படுவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இச் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்த நாட்டை ஐந்து வலயங்களாகப் பிரிப்பதெனவும், அவற்றில் ஒரு வலயமாகவே வட, கிழக்கு அமையும் எனவும் அரசாங்கத் தரப்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

இத்தகைய யோசனை ஒன்றின் விரிவாக்கத்தை - இன்று கொழும்பில் நடைபெறும் அரசாங்க அதிபர்கள் மாநாட்டிலும் வைத்து ஆராய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது.

அதேவேளை - ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவையின் முக்கிய உறுப்பினரான மிலிந்த மொறகொட பிரிட்டனுக்குச் சென்று, பிரிட்டிஷ் அரசின் உயரதிகாரிகளுடன் பேச்சுக்களை நடாத்தி இலங்கை முழுவதற்குமான அபிவிருத்திக்கென நிதியுதவியைக் கோரியுள்ளார்.

நாட்டின் ஒட்டுமொத்த அபிவிருத்திக்கென நிதி திரட்டிக் கொள்வதை எவரும் தடுக்கப் போவதில்லை. அது அவசியமானதும் கூட.

ஆனால் - போரினால் கோரமாகப் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு - கிழக்கோடு ஒப்பிடுகையில் உண்மையில் உடனடி உதவி யாருக்குத் தேவையென்பதை நியாயமான சிந்தனையுள்ள எவருமே இலகுவாகத் தீர்மானிக்க முடியும்.

அத்தோடு- யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தகுந்த நிவாரணம் வழங்காது, முழு நாட்டுக்குமான அபிவிருத்தியைப் பற்றிச் சிந்திக்கவும் முடியாது.

இந்தநிலையைப் புரிந்து கொண்டு வடக்கு - கிழக்கின் புனரமைப்புக்கு முன்னுரிமை கொடுப்பதே சாலச்சிறந்ததாக அமைய முடியும்.

அதேவேளை - அவ்வாறு செய்வதே தாய்லாந்துப் பேச்சுக்களின் அடிப்படையில் எட்டப்பட்ட முடிவின்படி இரு தரப்பும் இணைந்தே வெளிநாடுகளிடமிருந்து உதவிகோருதலும், புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளுதலும் என்ற முடிவுக்கு ஒத்திசைவானதாகவும் இருக்கும்.

அதைவிடுத்து - வட, கிழக்கு புனரமைப்பின் மீதான கவனத்தை மற்றைய பகுதிகளுக்குமென உடனடியாகச் சிதறவிடுவதும், தனியான நிதி சேகரிப்பு முயற்சிகளும் - கடந்த காலங்களில் தமிழர்களுக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவங்களை தவிர்க்க முடியாது நினைவுகூர்வதாகவே அமைந்துவிடும்.

தமிழர் பகுதிகளுக்கென வழங்கப்பட்ட உதவிகள் கடந்த காலங்களில் எப்படி தென்னிலங்கைக்கு திட்டமிட்டு இடமாற்றப்பட்டன என்பதை தமிழர்கள் மறந்துவிடவும் இல்லையென்பதை சம்பந்தப்பட்டோர் புரிந்து கொள்ள வேண்டும்.

எனவே, இத்தகைய கசப்பான சம்பவங்கள் மீளவும் நடைபெறாமல் இருப்பதை உடனடியாக உறுதிப்படுத்தும் பாரிய பொறுப்பை அரசாங்கமும், சர்வதேசமும் மேற்கொள்ள வேண்டியது மிக அவசியமானதாகும்.

# சிறுபான்மையினரின் சுயநிர்ணய உரிமையே உலகில் நல்லாட்சியை பெற்றுத் தரும்!

(நேற்றைய தொடர்ச்சி)

இதற்கான மாற்றீடுகளை சோசலிச சிந்தனைப்பள்ளி (School of Thoughts) வேண்டி நிற்கின்றது. இதன் மறுபுறத்தில் காலனித்துவகாலம் தொடங்கப்பட்ட மேற்கு ஐரோப்பாவின் சுரண்டலுக கூட்டாட்டு, இன்று காலனித்துவம், நவகாலனித்துவம், பின் தேசியவாதம், பின் நவீனத்துவம், மற்றும் உலக மயமாதல்வரை ஒரு நேர் கோட்டுத் தன்மையில் சுரண்டப்பட்டு வருகின்றது என்பது பட்டவர்த்தனமான உண்மையாகும். இன்று உலக வங்கி, சர்வதேச நாணய நிதியத்தின் கட்டமைப்பு மாற்றம் (Structure Adjustment) சுரண்டலின் உச்ச அலையை மேலும் விஸ்தரிக்கவும் வல்லமையுடன் செயலாற்ற துணை புரிகின்றது. இச் சுரண்டலுக்கு மனிதவுரிமை வைத்துக்கொள்ள உலக வர்த்தக ... இணைந்த, உலக வர்த்தக நிறுவனம் மற்றும் அதன் நிபந்தனைகள் சுரண்டலின் பகற்கொள்ளைகளாக" வர்ணிக்கப்பட வேண்டியவை.

இந்நிலையில் - இராணுவ மைய வல்லாதிக்கத்தையும்



ஜோர்ச் டபிள்யூ புஷ்

"எல்லாம் எமக்காகத்தான்"

## 'சுயநிர்ணய உரிமை' - ஓர் பார்வை

அதன் சர்வதேச ஒழுங்கினையும் நோக்குவோமாயின் பழைய சோவியத் ரஷ்யாவின் இராணுவக் கட்டமைப்பு அதன் உடைவுகளுடன் சேர்ந்து உடைந்து கொண்டது. அந்த உடைந்த நாடுகளின் இராணுவத்தையும், அதன் கட்டமைப்புகளையும் நேட்டோ (NATO) அமைப்பு உள்வாங்கிக் கொண்டது. அவ்வாறு உள்வாங்கியதுடன் அமெரிக்க அரசு ஆயுத குறைப்பு (de army) செய்யும் கனவானாக தன்னை உலகிற்கு வெளிக்கொணர்ந்தபோதும் விண்வெளி நட்சத்திர யுத்தத்திற்கு தன்னை தயார்ப்படுத்தி தன்னை இக்கிராமமாகிய உலகில் எந்தப் பகுதியிலிருந்தும் எவரும் தாக்க முடியாதவாறு தன்னை தகவமைத்துக் கொள்ள முயன்று வருகின்றது.

அமெரிக்காவின் (National Defence Missiles System) தேசிய ஏவுகணைப் பாதுகாப்பு திட்டம் 2002 ஆம் ஆண்டு யூலை 08 ஆம் திகதி பரிசோதனை முயற்சி தோல்வியை தழுவிக் கொண்டபோதும் 50 கோடி அமெரிக்க டொலர்களை செலவு செய்து NDMS திட்டத்தை லேசர் தொழில்நுட்பத்தின் மூலம் வெற்றி பெறச் செய்துள்ளது. எனினும் அமெரிக்க செனட் சபையும்,சர்வதேச அழுத்தமும் புஷஷின் நிர்வாகத்திற்கு தடையாகவுள்ளது. வடகொரியா 2005 ஆம் ஆண்டளவில் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைத் திட்டத்தில் வெற்றி பெறும் என கூறிக்கொண்டு NDMSஐ நடைமுறைப்படுத்துவதில் முன்னுரிமை கொடுக்கின்றது. இத்திட்டத்தின் பிரகாரம் 9600 கிலோமீற்றருக்கு அப்பால் இருந்து ஏவுகணைத் தளங்களை அழிப்பதற்கான ஒரு அந்நிய நாட்டு ஏவுகணை சுடப்பட்டு விரையுமாயின் 20 நிமிடங்கள் கழித்து அதை நோக்கி செய்மதியில் தூண்டப்பட்டு சுடப்படும் ஓர் எதிர் ஏவுகணை அதனை வானில் 231 கிலோமீற்றர் உயரத்தில் இடைமறித்து அழிக்கும் வல்லமை கொண்டது. ALASKA, NORTH DAKOTA போன்ற தளங்களில் 200 ஏவுகணைகளை அமெரிக்கா பொருத்திக் கொள்ளவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அடுத்து ஐரோப்பிய பெரும்பாக அரசின் பல்வேறு அரசுகள் NATO வில் ஏலவே இணைந்துள்ளன. எனவே அமெரிக்கா தலைமையிலான NATO விற்கு எதிராக ஐரோப்பிய வானில் பெரும்பாலான அரசு இராணுவ ரீதியான நடவடிக்கை எடுக்கவியலாதவகையில் நிறுவன ரீதியான நெருக்கடிகள் உருவாக்கும் சாத்தியங்கள் உள்ளன. மறு பக்கத்தில் இரண்டாம் உலக யுத்த தோல்விகளின் நிபந்தனைகளின் விளைவாக ஜப்பான் என்றுமே தனக்குரிய இராணுவத்தை கொண்டிருக்கவியலாத துரதிஷடத்தைக் கொண்டுள்ளது.

இரண்டாம் உலகமகா யுத்தத்தில் தோல்வியடைந்ததன் பிரகாரம் ஏனைய உலகநாடுகள் தோல்வியுற்ற அச்சநாடுகளுக்கு பல நிபந்தனைகளை விதித்திருந்தமை யாவரும் அறிவரே. இதன் பிரகாரம் ஜப்பான் இராணுவ, ஆயுத ரீதியாக தன்னை வலுப்படுத்த முடியாதவாறு உலக மகாயுத்த தோல்வியின் நிபந்தனை ஜப்பானுக்கு அமைந்தது. ஆனால் இன்று ஜப்பான் தொழில்நுட்ப ரீதியாக முன்னேற்றமை வேறுவிடயம். அதேவேளை ஜப்பான் 24 மணி நேரத்திற்குள் தன்னிடம் அணுவாயுதத்தை தயாரித்துக் கொள்வதற்கான தொழில்நுட்ப அறிவை தன்னகத்தே வைத்திருக்கின்றது. மேலும் அமெரிக்காவின் ஏவுகணைகளுக்கு, சில உதிரிப்பாகங்களை இன்றும் ஜப்பான் தான் தயாரித்துக் கொடுக்கின்றது.

இவ்வாறான பின்புலத்தில் கிராமமாகி வரும் உலகத்திற்கும் அதன் ஐரோப்பிய மையவாத சிந்தனைகள், விழுமியங்கள் மற்றும் கலாசாரத்திற்கு மத்திய கிழக்கில் தோன்றி, ஐரோப்பிய, இஸ்லாமிய குடியரசுக்கூடாக உள்நுழைந்த காட்டுமிராண்டித்தனமான கலாசாரம் என எட்வேட் சையித்தால் வர்ணிக்கப்படும் இஸ்லாமிய அடிப்படைவாதம் இன்று ஐரோப்பிய மையவாத நவீனத்துவத்திற்கும் அதன் நுண்மாண் நுழைபுலத்திற்கும் அச்சுறுத்தலாக அமைந்து வருகின்றது. ஆனால் எந்தவொரு இஸ்லாமிய அடிப்படைவாத அரசும் அமெரிக்கா தலைமையிலான நேட்டோவின் இராணுவத்துடன் மரபுரீதியான யுத்தத்தினை எதிர்கொள்ள தயாராக இல்லை.

இப்பகைப்புலத்திலே மரபு ரீதியான யுத்தம் இல்லாத வகையில் உலகம் கிராமமாகி விட்டது என்பது மகிழ்ச்சிக்குரியது. அதேவேளை - விளிம்பு நிலைப்படுத்தப்பட்டு ஓரங்கட்டப்பட்ட மக்களின் அழுகுரல்கள் இக் கிராமத்தில் ஒலிக்க யாதும் வழிப் பாதைகள் காணப்படவில்லை என்பது இன்றைய யதார்த்தம். இந்தவகையில் செப்டம்பர் 11ந் திகதி தாக்குதல் இதன் வெளிப்பாடு என்றால் அது இதற் குரிய உரிய வெளிப்பாட்டு முறையல்ல என்பது இந்த விளிம்புநிலை மக்களின் தெட்டத்தெளிவான முடிவாகவே இருக்கின்றது.

இப்புற யதார்த்தமான உலகக் கிராமத்தில் வருமானம், செல்வப் பகிர்வு ஒரு சில மையநாடுகளின் ஒரு சிலரிடம் போய்ச் சேர்வதால் ஏக்கங்களிலும் நிச்சயமின்மைகளின் பின்புலத்திலும் வாழும் "அபிவிருத்தியடைந்து விட்ட" நாடுகளின் மக்கள், மற்றும் அபிவிருத்தி ஓட்டத்தில் பின்நிற்கும் பழங்குடி மக்கள், சிறு கலாசாரக்குழுக்கள், மற்றும் தேசிய அரசுகளின் சிறுபான்மையினர் - அதாவது தங்களின் வாக்குப் பலத்தின் மூலம் தேசிய அரசாங்கத்தில் செல்வாக்குகளையோ, மாற்றங்களையோ ஏற்படுத்த முடியாத சிறுபான்மையினர் இன்று விளிம்புநிலை மக்களில் மிகவும் முக்கியமானவர்கள்.

இன்று ஐக்கிய நாடுகள் சபையில் இவர்கள் தொடர்பான கரிசனையிலும் பார்க்க இவ்வாறான விளிம்புநிலை மக்களின் அடக்குமுறையை எதிர்க்கும் ஆத்திரச் செயற்பாடுகளை மட்டுப்படுத்த சில கருத்தியல்கள் உலகக் கிராமத்தில் முன் வைக்கப்படுகின்றன. அவற்றில் ஒன்றுதான் இன்றைய உலகில் "சுயநிர்ணய உரிமை". இச்சுயநிர்ணய உரிமைகளுக்கூடாக சாந்தப்படுத்தப்பட்ட, சமாதானப்படுத்தப்பட்ட உலகு அதன் இறுதி இலக்காகும்.

இந்த வகையில் உலகின் 191 வது சுதந்திர நாடாக கிழக்கு திமோர் பிரகடனப்படுத்தப்பட்டமை கவனிக்கத்தக்கது. அத்துடன் இந்தோனேசியாவில் இஸ்லாமிய அடிப்படைவாத பிரச்சினைகளை தனக்கு பாதகமாக ஏற்படுத்தாதவாறு அமெரிக்கா நடந்து கொள்கிறது. இந்தவகையில் தேசிய அரசுகளுக்கு அற ஒழுக்கத்தை (Morality) ஏற்படுத்த ஐக்கிய நாடுகள் சபை இரண்டு பட்டயங்களை ஏற்படுத்திக் கொண்டது.

அவற்றில் ஒரு பட்டயம்- 1966ல் ஏறபடுததபபடட சாவதேச மனித உரிமைகள் பிரகடனமாகும். (Universal Declaration of Human rights) இப் பட்டயம் மனித உரிமைகளுக்கான சர்வதேச தராதரத்தின் சட்டக் கடப்பாடாக அமைந்துள்ளது.

மறு பட்டயமான குடியியல், அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச கட்டுறுத்து (International covenantion civil and political rights - ICCPR) மற்றும் பொருளாதார, சமூக கலாச்சார உரிமைகள் மீதான சர்வதேச கட்டுறுத்து ( International Convention Economic Social and Cultural Right ). இந்த இரு கட்டுறுத்துகளும் 1976 இல் நடைமுறைக்கு வந்தன.

இவ்விரு கட்டுறுத்துகளாலும் உலகளாவிய ரீதியில் விளிம்பு நிலை மக்கள் பயன்பெற்றுக் கொண்டார்களா என்பது தெரியவில்லை. இன்று கிராமமாகி வரும் உலகில் நல்லாட்சியை (good governance) உறுதிப்படுத்தும் வகையில் சுயநிர்ணய உரிமையுடன் கூடிய அதிகாரப் பகிர்வு மற்றும் நிர்வாக பரவலாக்கல் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அதற்கு மேலாக சமஷ்டி கோட்பாடு நடைமுறையில் உள்ளது. இவற்றுக்கூடாக அமைதியான உலகக்கிராமத்தை உருவாக்க பல்வேறு தாப்பினரும் முயன்று வருகின்றனர்.

**வேலும்மயிலும் சேந்தன்**

இவ்வாறான புற யதார்த்த சர்வதேச அரங்கில் விளிம்பு நிலை மக்களாகிய உலக சிறுபான்மையினரை தங்களது நல்லாட்சிகளை உறுதிப்படுத்த, சுயநிர்ணயத்தை உறுதி செய்ய ஐக்கிய நாடுகள் சபையிலும் சர்வதேச நீதிமன்றத்திலும் சட்டக் கட்டுறுத்துக்களை ஏற்படுத்த வேண்டும். உலக வல்லரசுகள், பிராந்திய வல்லரசுகள், பெரும் பாக வாணிப அரசுகளின் நலன்களில் நசிந்துவிடாது பாதுகாத்துக் கொள்ள ஆவனவற்றை செய்ய உலக சிறுபான்மையினருக்கு சர்வதேச ரீதியில் நிறுவன ரீதியான அமைப்பும் அதிகாரமும் தேவை.

இந்தவகையில் இலங்கைத் தமிழ்த் தேசிய இனத்தவர் உரக்கச் சிந்திக்க வேண்டியதும் செயற்பட வேண்டியதுமான நேரம் இதுவாகும்.

( பிரதி செவ்வாய் தொடரும்)

# ஈழத்தமிழரின் தாயகமும் தனித்துவமும் உறுதியான அங்கீகாரம் கொண்டவை!

**பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை பேராசிரியர் யாழ்ப்பாண வளாகம் ஆரம்பித்த காலகட்டத்தில் இருந்து அங்கு பணியாற்றும் இவர் யாழ். பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்பு பீடாதிபதியாகவும் கடமையாற்றி வருகின்றார்.**

**'பண்டைய தமிழகம்', 'யாழ்ப்பாண தொன்மை வரலாறு', 'யாழ்ப்பாண இராச்சியம்' (தொகுப்பு) 'ஈழத்து இந்து சமய வரலாறு' (1-ம் தொகுதி) ஆகிய நூல்களின் ஆசிரியரான பேராசிரியர், அண்மையில் வரலாற்று தொல்லியல் சான்றுகளின் அடிப்டையில் 'ஈழத்தமிழரின் தனித்துவமும் தாயகமும்' பற்றி கொழும்பில் நிகழ்ந்த ஒரு கருத்தரங்கிலும் விரிவான கட்டுரையொன்றைச் சமர்ப்பித்தார்.**

அவர் கூறுகின்றார்:-

இலங்கையின் பூர்வீகக் குடிகளாகத் தமிழர்கள் இருந்துள்ளார்கள் என்பதற்கான சரித்திரரீதியான அதாவது தொல்லியல் ரீதியான சான்றுகள் கடந்த கால் நூற்றாண்டு காலத்தில் இலங்கையில் கிடைக்கப்பெற்றுள்ளன. முன்பெல்லாம் தமிழர்கள் பின்வந்தவர்கள், வந்தேறுகுடிகள் என்ற கருத்துத்தான் முன்வைக்கப்பட்டது. ஆனால் கடந்த கால் நூற்றாண்டுக்கு மேலாகச் செய்யப்பட்ட ஆய்வுகளின் விளைவாக இலங்கை முழுவதிலும் தமிழ் மக்கள் சிங்கள மக்களைப் போன்று சமகாலத்தில் வந்து குடியேறியவர்கள் என்றும், சமகாலத்தில் நாகரிகம் பெற்றவர்கள் என்றும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

வரலாற்று ரீதியாகத் தமிழர்களின் தனிஅரசுகள் வடக்கு - கிழக்கு பகுதிகளில் செயறப்பட்டுள்ளன. பின்னர் வந்த ஐரோப்பியர்கள்கூட தமிழர்களின் தனி அரசுகளை அங்கீகரித்துள்ளதுடன், இந்தப்பகுதிகளில் தமிழ்மொழிக்குரிய அந்தஸ்தையும் கொடுத்துள்ளார்கள். குறிப்பாக பிரித்தானியர் காலத்து கிளைகோனின் குறிப்புக்கள் இதனைத் தெட்டத்தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

டச்சுக்காரர்களின் வரைபடங்களைப் பார்க்கின்றபோது அவர்கள் வடக்கு - கிழக்கு மாகாணம் தனித்துவமான மாகாணம் என்பதை ஏற்றுக் கொண்டிருக்கின்றார்கள். இது மலபார்கள் (தமிழர்கள்) வாழ்கின்ற பிரதேசம் என்பதை அங்கீகரித்துள்ளார்கள். அதுமட்டுமல்லாமல் வடக்கு - கிழக்கு மாகாணத்திற்கு தனித்துவமானதோர் நீதி, நிர்வாகத்தையும் அவர்கள் வழங்கினார்கள். மேலும் ஆங்கிலேயரின் குடிசன மதிப்பீட்டுக்குப் புள்ளிவிபரக்குறிப்புக்கள் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தமிழ்பேசும் மாகாணங்களாகவே இருந்துள்ளன என்பதை உறுதி செய்கின்றன. அத்துடன் மாகாண எல்லைகளை ஆங்கிலேயர் வரையறை செய்துள்ளமுறையை நோக்குகின்றபோதும் இவ்விடயம் அங்கீகரிக்கப்பட்டுள்ளமை புலனாகின்றது.

## விருந்தினர் பக்கம்

ஈழத்தமிழர் வரலாறு பற்றிய ஆய்வுகளில் முக்கிய பங்காற்றியவர்கள் பற்றியும் குறிப்பிட்டேயாக வேண்டும். பேராசிரியர்களான கா. இந்திரபாலா, சி. பத்மநாதன் போன்றோர் ஈழத்தமிழர் தொன்மை பற்றியும், யாழ்ப்பாண இராச்சியம் பற்றியும் ஆராய்ந்துள்ளனர். இவர்களுக்குப்பின் 1980இல் ஈழத்தமிழர் ஆதிக் குடியேற்றம் பற்றி முதன்முறையாக தொல்லியல் ரீதியிலே அப்போது கிடைத்த சான்றுகள் அனைத்தையும் ஒன்று திரட்டி ஆராயும் வாய்ப்பு எனக்குக் கிட்டிற்று.

இவ்வாறு ஆராய்வுகளை மேற்கொண்ட எமது முடிவுகளாக சிங்களத்தின் மூதாதை மொழியான 'எலு,' தமிழ்மொழி ஆகியவற்றைப் பேசியோரே இந்த நாட்டின் நாகரிககர்த்தாக்கள் என்பதை தொல்லியல், மானிடவியல், சமூகவியல் ஆகியவற்றின் அடிப்படையிலே ஆராய்ந்ததன் விளைவாக தமிழகத்தில் தமிழர்களுக்குரிய பழமை இருப்பதுபோல் ஈழத்திலும் தமிழ்மொழி மேம்பட்டது என நிருபிக்கப்பட்டுள்ளது.

இதைவிட பிராமிக் கல்வெட்டுக்களின் அடிப்படையிலே தமிழக அரச உருவாக்கத்தில் ஆய், வேள், பருமகன் போன்ற சிற்றரசர்களுடைய ஆட்சி தமிழகத்தில் காணப்பட்டதுபோல் ஈழத்திலும் அவற்றை யொத்த ஆட்சி காணப்பட்ட தென்பதை



பேராசிரியர் சி.க. சிற்றம்பலம்

எடுத்துக்காட்டியிருக்கின்றோம்.

1989 இல் கொழும்பில் நிகழ்ந்த வரலாற்றாசிரியர்களின் சர்வதேச மாநாட்டில் ஒரு கட்டுரையை வாசித்துள்ளேன். இதன் சுருக்கம் அண்மையில் ''ஈழத்தமிழர் தொன்மை'' என்ற நூலாக வெளிவந்துள்ளது.

இதேபோன்று பொ. ரகுபதி, செ. கிருஷ்ணராஜா, கலாநிதி பா. புஷ்பரட்ணம் ஆகியோரின் ஆய்வுகள் பிராமிக் கல்வெட்டுக்கள், நாணயங்கள் அடிப்படையில் தமிழர்களின் தொன்மை பற்றி பல புதிய தகவல்களைத் தந்துள்ளன.

இன்றைய நிலையில் நாம் பல கருத்தரங்குகளில் வலியுறுத்தியவாறு ஈழத் தமிழர் தொன்மை பற்றி, எந்தவொரு சர்வதேச கருத்தரங்கிலும் ஆணித்தரமாக எடுத்துக்காட்டுவதற்கும் மரபுவழி தாயகத்தின் வரலாறு பற்றி விளக்கி கூறுவதற்கும் சான்றுகள் கிடைத்துள்ளன.

தமிழ்த்தேசியப் போராட்டத்திற்கு எமது ஆய்வுகள் அணி சேர்ப்பதாக, சர்வதேச மட்டத்தில் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருத்தல் வேண்டும். கருத்தரங்குகள், போட்டிகள் மூலமும் வெளிநாட்டுக்கு தூதுவர்களுடனான சந்திப்புக்களின்போதும் எம் சமுதாயத்தின் அபிலாசைகளான தமிழ்த் தேசிய இனம், தமிழர் தாயகம், சுயநிர்ணய உரிமை பற்றி எடுத்துக்கூறி வந்துள்ளோம். தொடர்ந்து இவ்வாறு செய்வோம். பல்கலைக்கழகத்தில் எமது பணியுடன் ஆய்வுகளையும் மேலும் மேலும் மேற்கொள்வது எமது வரலாற்றுக்கடமை என்பதே எமது நிலைப்பாடாகவுள்ளது.

இவை ஒருபுறமிருக்க, சுதந்திரமடைந்ததன் பின்னரும்கூட மாறிமாறி ஆட்சிக்கு வந்த பெரும்பான்மைஇன அரசாங்கங்களும் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தமிழர் தாயகம் என்பதை அங்கீகரித்துள்ளன.

1937 இல் செய்து கொள்ளப்பட்ட பண்டா - செல்வா ஒப்பந்தம், 1965 இல் செய்து கொள்ளப்பட்ட டட்லி - செல்வா ஒப்பந்தம் என்பன வடக்கு - கிழக்கு மாகாணங்களை தமிழர் தாயகமாக அங்கீகரிக்கின்றன.

இவை யாவற்றிற்கும் மேலாக 1987இல் செய்து கொள்ளப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தம் வடக்கு- கிழக்கு மாகாணங்கள் தமிழர்களின் மரபுவழித் தாயகம் என்பதை உறுதிப்படுத்தி அவையிரண்டையும் இணைத்துக் கொள்ளவும் முயன்றது.

இங்கு மக்கள் கணிப்பு என்ற ஓர் அம்சம் இருந்தபோதிலும், முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா வடக்கு- கிழக்கு மாகாணங்கள் தமிழர்களின் மரபு வழித்தாயகம் என்பதற்கு அங்கீகாரம் அளித்தார் என்றே கூறமுடியும்.

மேலும் கடந்த 50 வருடங்களாக ஏற்பட்ட வன்முறைகளின்போது தமிழர்கள் எப்போதும் வடக்கு-கிழக்கிற்கே அனுப்பப்பட்டனர். எனவே இப்பகுதி தமிழர்தாயகம் என்பது அரசாங்கங்களால் மாத்திரமல்லாமல் மக்களாலும் மறைமுகமாக அங்கீகரிக்கப் பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கில் முஸ்லிம்கள் நிலைமை பற்றிக் கருதுவோமானால்நியாயத்தின் அடிப் படையில் நோக்குகையில் முஸ்லிம்களும் தமிழ்பேசும் மக்களே. அவர்கள் எவ்வாறு நிர்வாகத்தில் இணைத்துக் கொள்ளப்பட வேண்டுமென்பதை வட-கிழக்கு நிர்வாக அமைப்பு வருகின்ற போது அந்த நிர்வாக அமைப்பிற்குப் பொறுப்பானவர்களும் முஸ்லிம்களும் பேசித் தீர்ப்பதே சிறந்தது. அதேபோன்று வடக்கு-கிழக்கு இணைந்த நிர்வாக அலகில் உள்ள சிறுபான்மையினரான சிங்கள மக்களின் உரிமைகளையும் நாங்கள் அவர்களுக்கு வழங்கத்தான் வேண்டும்.

நேர்காணல்: —ஸ்ரீ

## சின்னஞ்சிறு செய்திகள்

### வீதி திருத்தம்

நீண்ட காலமாக திருத்தப்படாமலிருந்த மல்லாகம் மதி வீதி தற்போது திருத்தியமைக்கப்பட்டு வருகிறது. வீதியின் குறித்தளவு தூரமே இதுவரை திருத்தியமைக் கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கடந்த பத்து வருடங்களாக இவ்வீதி திருத்தப்படாது குன்றும் குழியுமாக காணப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (34)

### வரணியில் குளம் புனரமைப்பு

தம்பனைக்குளம் நியாப்திட்டத்தின் உதவியுடன் இடைக் குறிச்சி விவசாய சம்மேளனத்தினால் புனரமைக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் இக்குளத்து நீரினை தேக்கிவைத்து சிறுபோக பயிர்ச்செய்கையினை மேற்கொள்ளும் நோக்குடன் நியாப் நிறுவனத்தின் உதவியுடன் மேற்படி குளத்திலிருந்து கால்வாய் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இக்குளத்தில் நன்நீா மீன் வளர்ப்பை மேற்கொள்ளவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. (28)

### சாவகச்சேரி வீதி புனரமைப்பு

சாவகச்சேரி நகரசபைக்கு உட்பட்ட சில வீதிகளான சங்கத்தானை , கல்வயல் சண்முகானந்த மருதடி, ஐயர், பழைய பொலிஸ் நிலைய , என்பன சாவகச்சேரி நகரசபையால் புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றது.

### சித்திரக்கண்காட்சி

யாழ்.கல்வி வலயங்களில் உள்ள பாடசாலைகள் இணைந்து நடாத்தும் சித்திரக்கண்காட்சி இன்று புதன்கிழமை கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. இக்கண்காட்சி எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை நடைபெறும் என கல்விவலயம் தெரிவித்துள்ளது. (89)

### முதியோர் தினவிழா

பருத்தித்துறை பிரதேச செயலக முதியோர் தினவிழா இன்று புதன்கிழமை செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி கே.மயிலேறும் பெருமாளும், கௌரவ விருந்தினராக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே.எம். சிவாஜிலிங்கம் ஆகியோரும் கலந்து கொள்வர்.(15)

### வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம்

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தின் பழைய மாணவர்கள், உறுப்பினர்கள் ஆகியோருக்கான விசேட கூட்டமொன்று இம் மாதம் 5ஆம் திகதி வதிரியிலுள்ள கழக மண்டபத்தில் நடைபெற உள்ளது.

காலை 9.30மணிக்கு பொது அலுவலகங்களில் கழகத்தால் நடைமுறைப்படுத்தப்படும் செயன் முறைப் பயிற்சித் திட்டத்தில் பங்குபற்றுவோருக்கும், காலை 11.00 மணிக்கு பொது அலுவலகங்களில் தமிழ் சுருக்கெழுத்தாளர்களாகப் பணிபுரிபவர்களுக்கும், நண்பகல் 12.00 மணிக்கு ஏனைய உறுப்பினர்களுக்கும், பிற்பகல் 1.00 மணிக்கு கழக செயற்குழு உறுப்பினர்களுக்கும் நடைபெறும். இவற்றில் சம்பந்தப்பட்டவர்கள் தவறாது கலந்து கொளளும்படி கழகச் செயலாளர் க. வ.சிவச்சந்திரதேவன் கேட்டுள்ளார்.

### மகோற்சவம்

யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தான சித்திரபானு வருட மகோற்சவம் அக்டோபர் மாதம் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகின்றது.

# சாம்பலாக ஒப்படைக்கப்பட்டவர் போர்க் கைதியாகத் திரும்பினார்!

(கொழும்பு)

கடந்த சனியன்று இடம் பெற்ற போர்க்கைதிகள் பரிமாற்றத்தில் 1993 நவம்பர் மாதத்தில் விடுதலைப் புலிகளுடனான போரில் 'இறந்து விட்டார்' என்று கருதப்பட்டு அவரது குடும்பத்தினரால் சாவீடும் இறுதிக் கிரியைகளும் நிகழ்த்தப்பட்டிருந்த போர்க்கைதியும் குடும்பத்தினருடன் இணையும் வாய்ப்புக் கிட்டியது.

இருபத்தொன்பது வயதான எஸ்.எச். குணவர்த்தனா என்பவரே புலிகளினால் போர்க் கைதியாக வைக்கப்பட்டிருந்து விடுவிக்கப்பட்டவர்.

இவர் கொல்லப்பட்டுவிட்டார் என்று தெரிவித்து அவரைத் தகனம் செய்ததன் மூலம் பெறப்பட்ட சாம்பல் எனக்கூறி ஸ்ரீலங்கா இராணுவத்தின் நலன்பேணும் பிரிவினர் சிப்பாயது உறவினர்களிடம் 1993 இல் சாம்பல் அடைக்கப்பட்ட சிறுபொதியொன்றைக் கொடுத்தனர். அப்பொதியை அடிப்படையாக வைத்து அவரது குடும்பத்தினர் மரணக் கிரியைகளை சமய முறைப்படி நடத்தினர்.

ஆனால் மூன்று மாதங்களின் பின்னர் அந்தச் சிப்பாய் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக தனது குடும்பத்தினருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். அதன் பின்னரே அந்தச் சாம்பல் பொதிகயாக சாவீடு நடத்தியமையின் மடமைத்தனத்தை அக்குடும்பம் உணர்ந்து கொள்வதுடன் தமது இரத்த உறவு உயிருடன் உள்ளமை பற்றி பெருமகிழ்வும் கொண்டது.

தன்து சகோதரனின் வயிற்றில் நகைச்சுவை ததும்பத்தட்டியபடி குணவர்த்தனா தான் புலிகளின் போர்க் கைதியாக எட்டு வருடங்களாக இருந்ததால் தனக்கு கனமும் பெறுமானமும் கூடியுள்ளதாகக் கூறினார்.

# வன்னியில் வெடி பொருட்களில் சிக்கி ஒன்பது மாதங்களில் ஆறு பேர் பலி!

(கிளிநொச்சி நிருபர்)

வன்னிப் பகுதியில் மிதிவெடிகள், வெடிபொருட்களில் சிக்கி இவ்வருடம் ஆறு பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 13 பேர் உடலுறுப்புகளை இழந்துள்ளனர் எனப் புள்ளி விபரங்களில் இருந்து தெரியவருகின்றது.

இவ் வருடம் ஜனவரி மாதம் முதல் செப்ரெம்பர் வரையான ஒன்பது மாதகாலத்திலேயே இவ் இழப்புகள் ஏற்பட்டுள்ளன. உடலுறுப்புக்களை இழந்தவர்களில் கிளிநொச்சியைச் சேர்ந்த பத்துப் பேரும், முல்லைதீவை சேர்ந்த மூவரும் அடங்குகின்றனர். கடந்த வருடமும் வெடிப் பொருட்களில் சிக்கி ஆறு பேர் கொல்லப்பட்டதும், 64 பேர் அங்கங்களை இழந்ததும் குறிப்பிடத் தக்கது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலேயே ஆகக் கூடுதலானோர் மதிவெடி வெடிப் பொருட்களில் சிக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.(த)

# அழிந்து தென்னந்தோட்டங்களின் விபரங்கள் திரட்டப்படுகின்றன.

(நாவற்காடு)

தென்மராட்சிப் பிரதேசத்தில் 2000ஆம் ஆண்டு யுத்தத்தால் அழிவுற்ற தென்னந் தோட்டங்களின் விபரங்களை தென்னை அபிவிருத்திச் சபை திரட்டி வருகின்றது.தோட்டம் அமைந்துள்ள காணியின் உரிமையாளரின் பெயர், காணியின் பெயர், பரப்பளவு, தென்னைகளின் வகைகள் மற்றும் தொகை என்பன பதிவு செய்யப்பட்டு வருகின்றன.

இந்தப் பதிவுகளின் முதற் கட்டம் நாளையுடன் பூர்த்தியடைந்ததும் விபரங்கள் தென்னை அபிவிருத்திச் சபையின் தலைமையகதத்துக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

தென்னை அபிவிருத்திச் சபையின் தலைவர் அண்மையில் யாழ்ப்பாணம் வந்து சேதமுற்ற தென்னந் தோட்டங்களைப் பார்வையிட்ட பின்னரே, இந்த விபரங்களைத் திரட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (92)க

## இன்றைய நாள் இனிய நாள்

**02.10.2002 - புதன்கிழமை**

| | | |
|---|---|---|
| மேடம் | :- | வீடு, வாகனம், ஆகியவற்றில் திடீர் செலவு, பண வட யத்தில் ஏமாற்றம், வீண் அலைச்சல், வீட்டில் பெண் கள சுகயீனம் |
| இடபம் | :- | விருந்தினர் வருகை, நற்கருமச் செலவு, செய்தொழில் மகிழ்ச்சி, ஆபரண பலன். |
| மிதுனம் | :- | பணவரவு குறைவு, குடும்பத்தகராறு, மனச்சஞ்சலம், புதிய முயற்சி |
| கர்க்கடகம் | :- | மகிழ்ச்சி, பணவரவு, சுபகாரியச் செலவு, உறவினர் வருகை, தொழிஸ்தாபனத்தில் மனஸ்தாபம். |
| சிங்கம் | :- | வீண்செலவு, காரியத்தடை, தேக சுகக்குறைவு, மனஸ் தாபம் |
| கன்னி | :- | சுப காரியத்தில் பங்குபற்றல், ஆலய வழிபாடு, சான் றோர் தரிசனம், மகிழ்ச்சி. |
| துலாம் | :- | தொழில் முன்னேற்றம், மதிப்பு, மரியாதை, வெளியூர்ப் பயணம். |
| விருச்சிகம் | :- | பிதாவுடன் மனஸ்தாபம்,வைத்தியச் செலவு, எதிரியால் தொல்லை, பயம். |
| தனு | :- | தூரப்பிரயாணம் தவிர்க்க வேண்டும், எடுத்தகாரியம் தோல்வி, பிதா சுகயீனம், வைத்தியச் செலவு. |
| மகரம் | :- | மனைவிக்கு மகிழ்ச்சி, ஆபரணப் பலன், கௌரவம், பங்குபற்றல். |
| கும்பம் | :- | பணவரவு, காரியவெற்றி, புதிய கடன், நோய் குணம டைவது, எதிரி தலைகுனிவு. |
| மீனம் | :- | அபகீர்த்தி, பொது சேவையில் கௌரவக் குறைவு, கடன் வசூல் |

இ.வெங்கடேசஐயர், கொக்குவில

# சமாதான முயற்சிகள் தொடர்பாக 'சிஹல உறுமய' வுக்குள் விரிசல்

(கொழும்பு நிருபர்)

சிஹல உறுமய கட்சிக்குள் விரிசல் நிலை தோன்றியுள்ளதாகத் தெரியவருகின்றது.

இந்த முரண்பாடுகளையடுத்து சிஹல உறுமயவின் ஊடகப் பணிப்பாளர் சுஜித் அக்கரவத்த மற்றும் கட்சியின் கோட்டைத் தொகுதி அமைப்பாளர் ஆகியோர் கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளுக்கு சிஹல உறுமய ஆதரவு தெரிவிக்க வேண்டும் எனக் கோரி கட்சியின் தலைவர் திலக் கருணாரட்ணவுக்கு மேற்படி இருவரும் கடிதம் அனுப்பியிருந்தனர். இதையடுத்தே கட்சியின் கொள்கைகளுக்கு முரணாக நடப்பதாகக் கூறி இருவரையும் திலக் கருணாரட்ண கட்சியிலிருந்து நீக்கியுள்ளார்.

சிஹல உறுமயவுக்குள் முன்னரும் முரண்பாடுகள் ஏற்பட்டு எஸ். எல். குணசேகர கட்சியை விட்டு வெளியேற்றப்பட்டமை குறிப்பித்தக்கது.

புலிகள் தமிழீழக் கோரிக்கையையும் ஆயுதங்களையும் கைவிட்டு, ஒரே நாட்டுக்குள் பிரச்சினைகளைத் தீர்க்க முன்வந்தால் மட்டுமே புலிகளுடன் பேச்சு நடத்தலாம் என்று சிஹல உறுமய வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# குடாநாட்டில் 'எய்ட்ஸ்' அபாயம் அண்மைக்காலமாக அதிகரிப்பு!

## - ஒன்பது மாதத்தில் ஐந்துபேர் நோயால் பீடிப்பு -

யாழ் குடாநாட்டில் எயிட்ஸ் நோயின் அபாயம் அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்றது இவ் அபாயகரமான அறிகுறிகளைத் தொடர்ந்து மேற்படி நோய் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒன்பது மாதகாலப்பகுதியில் மட்டும் ஐந்து பேர் எயிட்ஸ் நோயால் பீடிக்கப்பட்டிருப்பது சோதனைகள் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும் மூன்று பேரில் எயிட்ஸ் நோய்க்கான பல அறிகுறிகள் அவதானிக்கப்பட்டுள்ளன. எனினும் நோய் உள்ளது என்பது உறுதி செய்யப்படவில்லை. இவர்களது குருதி கொழும்பு எயிட்ஸ் நோய்த் தடுப்பு பிரிவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடங்களுடன் ஒப்பிடும் போது இவ்வாண்டு மேற்படி நோய் காரணமாக யாழ் போதன மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருபவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளதாக இவ்வைத்தியசாலையின் எயிட்ஸ் நோய்த்தடுப்பு பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த 1999ஆம் ஆண்டு இரண்டு 'எயிட்ஸ்' நோயாளிகள் அடையாளம காணப்பட்டனர். 2000ஆம் ஆண்டு நான்கு பேர் அடையாளம் காணப்பட்டனர். 2001ஆம் ஆண்டு ஒருவர் அடையாளம் காணப்பட்டார். இந்த ஆண்டு இது வரை ஐந்து பேர் நோயாளிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் .கடந்த நான்கு ஆண்டுகளில் மேற்படி நோய் காரணமாக சிகிச்சை பெற்று வந்தவர்களில ஆறு பேர் மரணமடைந்துள்ளனர். ஏனையோர் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். (க)

### கீரிமலையில் குடிநீர் கிணறு

கீரிமலையில் பொதுமக்களின் நன்மை கருதி குடிநீர் கிணறு ஒன்றை புனரமைப்பு செய்வதற்கு வலி.வடக்கு பிரதேச சபையினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (93)

# பனம் பொருள் உற்பத்தியில் தீவுப்பகுதி மக்கள் ஆர்வம்

(மண்கும்பான்)

தீவுப்பகுதி மக்கள் பனம் பொருட்களை அதிகளவில் உற்பத்தி செய்வதில் நாட்டம் காட்டுகின்றனர்.

நெடுந்தீவு, மண்கும்பான், வேலணை, அல்லைப்பிட்டி, போன்ற பகுதிகளைச் சேர்ந்த மக்களே பனம பொருள் உற்பத்திகளை அதிகளவில் மேற்கொண்டு வருகின்றனர். அண்மைக்காலமாக பனம் பொருட்களை கூடுதலான விலை கொடுத்து கொள்வனவு செய்வதாலே பனம் பொருட்களுக்கான கேள்வி அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக இப்பகுதி மக்கள் பனம் பொருட்களை உற் பத்தி செய்வதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# 'எயிட்ஸ்' அரக்கனிடமிருந்து எப்படித் தப்ப முடியும்?

**குணராஜா நக்கீரன்**
பொதுச் சுகாதாரப் பரிசோதகர்
பாலியல் நோய்கள்/எயிட்ஸ் தடுப்பு நிகழ்ச்சி
யாழ். போதனா வைத்தியசாலை.

இன்று உலகின் மனித சமுதாயத்தை உலுக்கிக் கொண்டிருக்கும் பிரச்சனைகளில் வேகமாக பரவும் பாலியல் தொற்று நோய்களும் ஒன்றாகிறது. மனித சமுதாயத்தை வேரோடு சாய்த்து விடக்கூடியளவிற்கு இன்று பாலியல் தொற்றுநோய்களுள் ஒன்றான **AIDS** பிரச்சினையாக உள்ளது. மனித சமுதாயம் நீண்டு வாழ்வதற்கு எத்தனையோ வகையான முயற்சிகள் எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும்போது இந்த 'எயிட்ஸ்' எனும் காலனின் கரங்களிலிருந்து தப்புவது மிகவும் சிரமமானதாக உள்ளது.

பாலியல் தொற்றுநோய் என்பது பாலியல் உறவு மூலம் ஒருவரில் இருந்து இன்னொருவனுக்கு தொற்றுகின்ற நோய்களாகும். **(Sexualy Transmitted disease)** இந்த நோய்களை 3 விதமாக வகைப்படுத்தலாம்.

1. பாலியல் உறவு மூலம் மட்டும் தொற்றும் நோய்கள்
2. பாலியல்உறவு மூலம் வேறு வகையாகவும் தோற்றும்நோய்கள்
3. பாலியல் உறவில் தோற்றாத ஆனால் பாலியல் உறுப்பில் காணப்படும் நோய்கள்.


இன்று எமது பிரதேசத்தில் சிபிலிஸ், கொனோரியா, ஹேர்பிஸ் போன்ற நோய்கள் மிகப் பொதுவானவையாகும். **HIV-AIDS** குறிப்பிடத்தக்க அளிவிலும் காணப்படுகின்றது. ஏனைய காலங்களை விட அண்மை வருடங்களாக எமது பிரதேசங்களிலும் பாலியல் நோயாளர்களின் எண்ணிக்கை உயர்வடைந்து செல்வது சிகிச்சை நிலைய பதிவுகளின் படி தெளிவாகிறது. இருப்பினும் சிபிலிஸ், கொனோரியா போன்ற நோய்கள் சிகிச்சை பெற்று குணமடையக்கூடியவை என்பது ஒரு அதிஷ்டமே.

ஆனால் இன்று **HIV**/எயிட்ஸ் நோய் மிகவும் பாரதூரமான தனிப்பட்ட, குடும்ப, சமுகப்பாதிப்புக்களை ஏற்படுத்துவது குறிப்பிடப்பட வேண்டிய விடயம்.

உதாரணமாக:-

சிபிலிஸ் நோய் ஒருவருக்கு தொற்றுவதால்,அவரின் பாலியல் தொடர்பாளருக்கு தொற்றலை ஏற்படுத்துவார் எனினும் நோய் கண்டு பிடிக்கும் பட்சத்தில் அனைவருக்கும் முடிந்தளவு சிகிச்சை அளித்து மாற்றலாம். ஆனால் **(AIDS/HIV)** தொற்று ஏற்படுமானால்,நோய் நிலை **(AIDS)** ஏற்பட 8-12 வருடங்கள் ஆகும். இந்தக் காலத்தில் அவர் மூலம் ஏனையவர்களுக்கு பரவும் சந்தர்பபங்கள் உள்ளன. அது மட்டுமன்றி, நோய் கண்டு பிடிக்கப்பட்டால், அவர் தன்னிலையை ஏற்றுக்கொள்ள முடியாமல் உளவியல் பாதிப்புக்கு உள்ளாவதுடன் சமுகத்திலிருந்து ஒதுக்கப்படும் நிலையும் உருவாகும். மற்றும் குடும்ப உறுப்பினர்களின் அன்பு பாசம் கேள்விக்குறியாகலாம்? முடிவில் ஒரு சில வருடங்களுக்குள் நிச்சயமான இறப்பு ஏற்படுகிறது.

இவ்வாறு **HIV** - எயிட்ஸின் பாதிப்பு தனிப்பட்ட சமூக, பாதிப்புக்களை அதிகளவு ஏற்படுத்துவதால் இன்று நாம் இந்த நோயின் பாதிப்பில் இருந்து தப்புவதற்கான வழிகள் பற்றி நிச்சியமாக சிந்திக்க வேண்டிய நிலையில் உள்ளோம். இந்த நோயின் பரவுகையை எடுத்து நோக்கின் 98% பாலியல் தொடர்புகள் மூலமே ஏற்பட்டுள்ளது என்பது உறுதிப் படுத் தப்பட்டுள்ளது. ஆனால் நாம் மிகுதி 2% காரணமாக உள்ள, இரத்த மாற்றீடு, ஊசி போடும் போது ஏற்படும் தொற்றுக்கள், சவரம் செய்யும் போது ஏற்படும் தொற்றுக்கள் பற்றியே அதிகம் அலட்டிக்கொண்டு எம்மை நாமே ஏமாற்றிக்கொள்கிறோம். இன்னும் சொன்னால், எமது பிரதேசத்தில் இதுவரை கண்டு பிடிக்கப்பட்ட 25 "எயிட்ஸ்" நோயாளிகளினதும் பாலியல் தொடர்பு மூலமே நோயைப் பெற்றிருப்பது தெளிவான ஒரு நிலையை எமக்கு புலப்படுத்துகிறது.




இன்று எமது சமூகத்தில் பாலியல் நோய்களின் தாக்கம், தேவையற்ற கர்ப்பங்கள், **Illegal Abortion** போன்றவை அதிகளவு நடைபெறுவது வைத்திய வட்டாரங்கள் மூலம் உறுதிப்படுத்தப்படுகிறது. உதாரணமாக:-

(13வயது பாலியல் தொழி லில் ஈடுபடுதல், 14வயது சிறுமி கர்ப்பந்தரித்தல்) இந்த நிலைக்கான காரணங்களை நாம் அறிவியல் ரீதியாக சிந்தித்து தக்க பரிகாரம் காண விளையாவிட்டால், எமது சமூகத்தின் எதிர்காலமும், அடையாளமும் கேள்விக்குரியதாகிவிடும்.

இந்த வகையில் எமது சமூகத்தின் இன்றைய நிலையினை நோக்கின்,

1. அதீத சினிமா மோகம் காணப்படுகிறது.
2. வாழ்நாளின் பெரும் பகுதியை தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் ஏப்பமிடுகின்றன.
3. அளவுக்கதிகமான, கட்டுப்பாடற்ற ஆபாசப்படங்கள், யௌவனப்பகுதியினரின் கைகளில் காணப்படுகிறது.
4. பெருகி வந்துள்ள மதுபான விற்பனை நிலையங்களும், அவற்றிற்குப் படையெடுக்கும் இளைஞர்களும் பெருகிவிட்டனர்.
5. மது அருந்துவதை ஏற்றுக் கொள்ளக்கூடிய கலாச்சாரமாக்கும் முயற்சியில் கல்வியலாளர்கள் சமூக உயர் மட்டத்தினர் செயற்படுகின்றனர்.
6. பொருளாதார கஷ்டம்/வறுமையை போக்க பாலியல் தொழிலை சில பெண்கள் நாடுகின்றனர்.
7. மனித விழுமியங்கள் என்பது என்ன என்பது தெரியாத நிலையில் இளைஞர் சமுதாயம் நிலைகுலைந்து, தறிகெட்டுத்திரிகிறது.
8. பண்பாடும், தனித்தன்மையுமே மனித வாழ்க்கை என்பதை துறந்து- நிராகரித்து, பணமும், போலிக் கௌரவமுமே வாழ்க்கை முறை என்பதாக பலர் வாழ விழைகின்றனர்.
9. சுதேச மதகலாச்சாரங்களை மறந்து, மதமாற்ற நடவடிக்கைகளில ஈடுபடுபவர்கள் அதிகரித்துள்ளனர்.

இவ்வாறு பல்வேறு சமூகவியல் மாற்றங்கள் எம் மக்கள் மத்தியில் நிகழ்ந்து கொண்டு உள்ளது.

பாலியல் நோய்களின் கட்டுப்பாடு தடுப்பு பற்றி சிந்திக்கும் நாம் நிலைமைகளைக் கருத்தில் எடுக்க வேண்டிய தேவை உள்ளது. சினிமா மோகத்தில் மூழ்கியிருக்கும் இளைஞர்கள், யுவதிகள் அவற்றின் பாதிப்புக்கு ஆளாவது தடுக்கமுடியாதது. உணர்ச்சிகளைத் தூண்டும் வகையில் அமைந்துள்ள சினிமாக்களைப் பார்ப்பதனால் மனக்கிலேசத்திற்கு உள்ளாகும் இளைஞர், யுவதிகள் அந்த உணர்ச்சிக்கு வடிகால் தேடுவது இயற்கையே. எந்த ஒரு உணர்சசியும் எழும் போது அதற்கொரு வடிகால் தேடுவது மனிதஇயல்பு. கோபம் கொண்டவன் அதை ஏதோ ஒருவழியில் வெளிக்காட்டுகிறான். சந்தோசம் வந்தவனும் ஏதோ ஒரு வழியில் வெளிக்காட்டுவது போல பாலியல் உணர்ச்சித் தூண்டலுக்கு ஆட்பட்ட இளைஞன் அதற்கு இலகுவாக கிடைக்கும் வடிகாலைத் தேடுகிறான். விபசாரிகள், பாலியல் தொழிலாளர் இடத்தை நாடுகிறான். சரியான பாலியல் அறிவற்ற நிலையில் உணர்ச்சிக்கு வடிகால் தேடப் போய் நோய் வாங்குகிற ஒரு துர்ப்பாக்கிய நிலை ஏற்படுகிறது. மற்றும் இன்று பொது சமூகம் ஒரு மேற்கத்தைய **(westernize)** மோகத்தில் அவர்களுடைய வாழ்க்கை முறையை **(lifestyle)** பின்பற்ற முனைகிறது. அறிவியல் ரீதியில் கணினியுகம் இன்று உலகம் முழுவதையும் சுருக்கி அறைக்குள் சின்னத் திரையில் (கணினி) தருகிறது. காணக்கூடாதவற்றையும் கேட்கக்கூடாதவற்றையும் வீட்டில் இருந்தே பார்க்க வழிசெய்து தருகிறது அறிவியல்.

இந்த நிலையில் எம் இளைஞர் யுவதிகளிடையே ஒரு பூரண பாலியல் விழிப்புணர்வு அவசியமாகிறது. மேற்கத்தைய சமூகம் பூரணமான அறிவுடனும், பாதுகாப்பு முறைகளுடனும் செயற்படுவதால் தம்மைக் காத்துக கொள்ளும் அதே வேளை எமது சமூகம் போதிய அறிவோ முன்னோக்கோ விழிப்புணர்வோ இன்றிப்போய் தவறி விடுகின்றது. சமூக மாற்றம் என்பது தொடர்ந்து கொண்டே இருக்கக் கூடிய ஒன்றே. அதே போல் சமூக நகருதல் **(social mobility)** சமூகமயமாதல் **(socialisation)** என்பனவும் தவிர்க்க முடியாதனவே. எனவே நாம் எம் வாழ்க்கை முறையை அதற்கேற்றதாற் போல் ஆக்க வேண்டியது அவசியமாகின்றது டார்வின் கூர்ப் புக் கொள்கை போல் 'தக்கன பிழைக்கும் தகாதன அழியும'. இன்றைய சமூக மாற்றங்களுக்கு குறிப்பாக பாலியல் ரீதியிலான தன்மைகளுக்கு ஏற்ப எம்மை மாற்றியமைப்பதன் மூலமே எயிட்ஸ் நோயின் பாதிப்பில் இருந்து எம்மைக் காக்க முடியும்.

பாலியல் பற்றிக் கதைத்தல் பார்த்தல், அறிவைப் பெறுதல் என்பவை எதிர்மறையாக பார்க்கப்படாமல், நேர்முகமாக நோக்கப்படுதல் வேண்டும்.

யௌவன பருவத்தினர் அனைவருக்கும் பூரண பாலியல் அறிவு பாலியல் நோய்கள் சம்மந்தமான அறிவு கிடைக்கும் பட்சத்திலே பாலியல் நோய்களின் பாதிப்புக்கு ஆளாகுபவர்கள் எண்ணிக்கை நிச்சயமாகக் குறையும்.

எயிட்ஸ் நோய்த் தடுப்பிலே இன்று பாரிய நன்மையைத் தரக் கூடிய ஒன்றாக 'சுகநலக் கல்வி அளித்தல்' என்பதே ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. எனவே எமது சமூகத்தில் அண்மைக்காலமாக அதிகரித்துவரும் பாலியல் நோய்களின் தாக்கம் குறைய குறிப்பாக எயிட்ஸிலிருந்து சமூகத்தைப்பாதுகாக்க அனைவருக்கும் இது சம்பந்தமான ஒரு பூரண அறிவை கிடைக்கச் செய்வதன் மூலம் அவர்களுக்கு இது தொடர்பான விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த முடியும். விழிப்புணர்ச்சி இருக்கும் போது நோய்த் தாக்கத்துக்கு உட்படுவது குறிப்பிடத்தக்க அளவு குறையும் என்பதே கல்வி யலாளர்கள் கருத்து.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# வன்னியிலிருந்து திரும்பியவர்களுக்கு விரைவில் வீடமைப்பு உதவித் திட்டம்!

(யாழ்ப்பாணம்)

அண்மையில் வன்னியில் இருந்து திரும்பியவர்களுக்கான வீடமைப்பு உதவித்திட்டம் ஒன்று மிகவிரைவில் யாழ்.மாவட்டத்தில் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

அகதிகளுக்கான ஐக்கியநாடுகள் நிறுவனத்தின் (யு.என்.எச்.சி.ஆர்.) நிதி உதவியை பயன்படுத்தி ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் மேற்படி வீடமைப்புத்திட்டத்தை செயற்படுத்த உள்ளது.

இவ்வீடமைப்புத்திட்டத்தின் படி வீட்டு வசதி எதுவும் இல்லாத குடும்பங்களுக்கு அரை நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளது. அத்துடன் மலசலகூடம் ஒன்றும் அமைக்கப்படும்.

இவை இரண்டையும் அமைப்பதற்கு குடும்பம் ஒன்றுக்கு எழுபதாயிரம் ரூபா செலவிடப்படவுள்ளது. வீட்டு வசதி தேவையான ஒவ்வொரு குடும்பம் தொடர்பாகவும் தேவை மதிப்பீடு செய்தல்,மற்றும் தெரிவு முன்னுரிமை ஆகிய விடயங்களையும்,மற்றும் கட்டுமான சேவைகளையும் ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனம் மேற்கொள்ளும்.

மேற்படி செயற்றிட்டம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று அண்மையில் யாழ்.செயலகத்தில் நடைபெற்றது. இதைத் தொடர்ந்து மேற்படி வீடமைப்பு உதவித்திட்டம் தொடர்பாக குடாநாட்டின் அனைத்து பிரதேச செயலகங்களுக்கும் சுற்று நிருபம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சொந்தமாக காணி உள்ளவர்களுக்கும் வீடு முழுமையாக சேதமடைந்தவர்களுக்கும் மேற்படி செயற்றிட்டத்தில் முன்னுரிமை வழங்கப்படவுள்ளது. எனினும் மாவட்டம் முழுவதும் குறிப்பிட்ட எண்ணிக்கையான வீடுகளே அமைக்கப்படவுள்ளன எனவும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் நிறுவனம் தெரிவித்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சியில் ராணுவத்தின் அரண்களை அகற்றுவதற்கு 40 மில்லியன் ரூபா தேவை!

(கிளிநொச்சி நிருபர்)

கிளிநொச்சி மாவட்டத்தின் பகுதிகளில் கடந்த காலங்களில் சிறீலங்காப் படையினர் அமைத்த மண் அரண்களை முற்றாக அழித்து மக்கள் வாழவும், பயிர்செய்யவும் ஏற்றவகையில் மாற்றக் குறைந்தது 40 மில்லியன் ரூபா தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது என்று கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் தெரிவித்தார்.

பளை உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட பகுதியிலும் கரைச்சி, கண்டாவளை உதவி அரச அதிபர் பிரிவுகளுக்குட்பட்ட பகுதிகளிலும் பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளிலும் சிறிலங்கா படையினர் கடந்த காலங்களில் தாம் நிலைகொண்ட இடங்களில் மிகப்பலமான மண் அரண்களையும் காவலரண்களையும் குறுக்கும் நெடுக்குமாக மக்கள் வாழிடங்களலும் பயிர் செய்கை நிலங்களிலும் அமைத்திருந்தனர். மக்கள் மீளக் குடியமரவும், பயிர் செய்யவும் இந்த அரண்கள் அகற்றப்பட வேண்டும். கிளிநொச்சி நகருள்ளும், அதனை சூழ்ந்த பகுதியிலும், அதனை சூழ்ந்த கிராமங்களுள்ளும், பரந்தன் சந்தி அதனைச் சூழ்ந்த பகுதிகள், ஆனையிறவு அதனைச்சூழ்ந்த பகுதிகள், பளைப் பகுதிகள், பூநகரியில் கறுக்காய்தீவு முதல் பள்ளிக்குடாவரை வாழையடிச் சந்தியை உள்ளடக்கிய பகுதிகள் என்பன சிறீலங்கா படையினரின் மண் அரண்கள் நிறைந்துள்ள கிளிநொச்சி மாவட்டப் பகுதிகளாகும். இவற்றை அகற்ற குறைந்தது 40 மில்லியன் ரூபா தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் - கிளிநொச்சி மாவட்டத்தின் பரப்பளவில் மூன்றில் இரண்டு பகுதிகள் மிதிவெடிகள் விதைக்கப்பட்டவை எனவும் கணிப்பிடப்பட்டுள்ளது. இவற்றில் ஒரு தொகுதியை கண்ணிவெடி அகற்றும் மனிதநேயக் குழுவினர் அகற்றியுள்ளனர்.

## பாராளுமன்றக் குழு நாளை யாழ்.வருகிறது

மனித உரிமைகள் தொடர்பான சட்டங்களில் உள்ள குறைபாடுகளை இனங்கண்டு அவற்றைத் திருத்துவதற்கான சிபார்சுகளை முன்வைப்பதற்கான பாராளுமன்றக் குழு நாளை யாழ்ப்பாணம் வருகை தருகிறது.

இப்பாராளுமன்றக் குழுவில் இரா. சம்பந்தன், புத்திரசிகாமணி, மகிந்த சமரசிங்க ஆகியோரும் இடம் பெற்றுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் பொது மக்களின பிரதிநிதிகள், அரச நிறுவனங்கள், அரச சார்பற்ற அமைப்புக்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல்களிலும் கருத்தரங்குகளிலும் பங்குபற்றுவதன் மூல மாக இக்குழு கருத்துக்களைத் திரட்டவுள்ளது.

## இணுவிலில் நவராத்திரி போட்டி

(மருதனார்மடம்)

இணுவில் கந்தசுவாமி கோவில் இளந்தொண்டர் சபையினரால் நவராத்திரி தினத்தையொட்டி போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

சைவச் சிறார்களிடையே நடத்தப்படும் இப்போட்டியை இம்மாதம் 10ஆம் திகதி நடத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## ஜெயலத் அமைச்சில் ஆலோசகராக வாமதேவா?

(கொழும்பு)

வடக்குக்கான புனர்வாழ்வு, புனர்நிர்மாண அதிகார சபை என்ற பெயரில் முன்பு இயங்கிய அமைப்பின் தலைவராகவிருந்த என்.வாமதேவாவை (வயது 72) தனது அமைசசில் ஆலோசகர் பதவியில் அமர்த்துவதற்கு டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தனா முயற்சித்து வருகிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெறுவதற்கு அமைச்சர் உறுதியாகச் செயற்படுகிறார் என கொழும்பில் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வாமதேவா இப்பதவிக்கு நியமிக்கப்பட்டால், அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் அவர் பெறும் ஓய்வூதியத்துடன் ஓய்வு எடுக்க வேண்டிய காலத்தில் அவர் பெறும் இரட்டைப் பதவிகளில் ஒன்றாக அமையும்.

ஏனெனில் ஏற்கனவே அமைச்சரவைப் பிரகடனம் ஒன்றின் மூலமாக மேற்குப் பிராந்திய அபிவிருத்தி அமைச்சின் ஆலோசகர் பதவியில் அவர் அமர்த்தப்பட்டிருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழர்களுக்கு சுயாட்சி வழங்க வேண்டும்!

(கொழும்பு நிருபர்)

தமிழர்களுக்கு நிச்சயமாக சுயாட்சி வழங்கப்பட வேண்டும். அவர்களை வேறு ஒரு நாட்டுக்குப் போகும்படி சொல்வதற்கு இங்கு எவருக்கும் அதிகாரம் இல்லையென மகா கடவல புஞ்ஞசார தேரர் தெரிவித்துள்ளார்.

குருநாகல் டீ மெல் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் - இலங்கையில் சுத்தமான எந்த இனமுமே கிடையாது. சிங்களவரும் கலப்பினம் தான். தமிழர்கள் இங்கு பூர்வீகமாக வாழ்ந்து வருவதால் அவர்களுக்கு சுயாட்சி கொடுப்பதே சிறந்தது எனவும் தெரிவித்தார்.

## பிரதம செயலர் நியமனம்: பிரதமரிடம் முறையீடு!

(கொழும்பு)

வட.கிழக்கு மாகாண பிரதம செயலாளர் நியமனத்துக்குத் தகுதியானவர் சண்முகலிங்கம் தான் என்றும் தற்போது இந்தப் பதவியிலுள்ள ரங்கராஜா சேவை மூப்பு அடிப்படையில் தகுதியற்றவர் என்றும் பிரதமரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த் தியே மேற்படி விடயம் குறித்துப் பிரதமரிடம் தெரி வித்துள்ளார்.

மேற்குறித்த நியமனம் அடிப்படை உரிமையை மீறும் செயல என்றும் எதிர்காலத்தில் இவ்வாறான நியமனங்களின் போது சேவை மூப்பு விடயத்தை கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும் அவர் பிரதமரிடம் வேண்டு கோள் விடுத்துள்ளார்.

## மாணவன்....

ஸாரைச் சமாதானப்படுத்தியதுடன் மாணவரைத் தாக்கிய பொலிஸாரை அடையாளம் காட்டினால் நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்தார். இதன்போது படையினரின் டிரக் வண்டிச் சில்லுகளில் மாணவர்கள் காற்றைக் கழற்றிவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இப்பதற்ற நிலையினால் மட்டு - திருமலை வீதி 12 மணிநேரமாகப் போக்குவரத்திற்கு மூடப்பட்டிருந்தது. வீதி மறியலின் ஒரு கட்டத்தில் வீதியில் போடப்பட்டிருந்த தடைகள் சில பொதுமக்களால் எரியூட்டப்பட்டன. இச்சம்பவத்தைத் தொடர்ந்து கல்குடா இராணுவக் கட்டளை அதிகாரி போர்ட்டி பெரேரா, வாழைச்சேனைப் பொலிஸ் பொறுப்பதிகாரி பொடி மாத்தயா, விடுதலைப்புலிக ளின் ஆண்டான்குள அரசியல் பொறுப்பாளர் மகேஸ், துணை இராணுவப் பொறுப்பாளர் மார்க்கன், போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுப் பிரதி நிதி கெனத ஆகியோர் இப்பகுதிகளுக்கு விரைந்து வந்து சேர்ந்தனர். வீதி திறப்புப் பற்றி இவர்கள் ஆராய்ந்தனர்.

இறுதியில் மூடப்பட்டிருந்த வீதி போக்குவரத்திற்குத் திறந்துவிடவும், மட்டு - வாழைச்சேனை வீதியூடாக இரவு 10 மணிவரை போக்குவரத்துச் செய்யவும் படைத்தரப்பு இணங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

## கண்காணிப்பு...

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் விடுதலைப் புலிகளிடம் இரண்டு விடயங்களை முன்வைத்தனர். புலிகளால் கைதுசெய்யப்பட்ட ஏழு பேரில் குறிப்பிட்ட ஒருவரை மருத்துவரீதியான தேவை ஒன்றுக்காக விடுவிக்கும்படி கோரினர். குறிப்பிட்ட சிப்பாயின் பிள்ளை சுகவீனமுற்று இருப்பதால் தந்தை இரத்தம் வழங்கவேண்டி உள்ளதாக அங்கு தெரிவித்தனர்.

அத்துடன் இராணுவக் கைதிகளை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும் மனிதாபிமான அமைப்புக்களும் பார்வையிட அனுமதிக்க வேண்டும். இவ்விரண்டு கோரிக்கைகளையும் விடுதலைப் புலிகள் கவனத்தில் எடுத்தனர்.

இவ்விவகாரம் தொடர்பாக பி.பி.ஸிக்கு போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தகவல் தொடர்பு அதிகாரி கருத்துத் தெரிவித்தார்.

ஏழு படையினரும் கைதுசெய்யப்பட்ட பிரதேசம் சர்ச்சைக்குரிய பகுதியாக உள்ளது. அது எவரது கட்டுப்பாட்டுப் பகுதியென வரையறுக்க முடியாதுள்ளது. அதனால் அச்சிப்பாய்கள் அப்பிரதேசத்தில் உலாவியமை போர்நிறுத்த மீறலா என்று சரியாகக் கணிப்பிடமுடியாதுள்ளது. அத்துடன் மிக அண்மையில் தான் போர்க்கைதிகள் பரிமாற்றம் நடைபெற்றது. அதனையடுத்து இச் சர்ச்சை தோற்றம் கொண்டுள்ளமை எம்மையும் பொதுமக்களையும் ஆச்சரியப்படுத்துவதாக உள்ளது என்று அந்த அதிகாரி கூறினார்.

## இயல்பு நிலையை.....

- இராணுவ நெருக்குவாரங்கள் மத்தியில் அமைதி ஏற்படுத்தப்பட முடியாது. இராணுவ நெருக்குவாரங்கள் அகற்றப்பட்டு சுமுகமான நிலை தோற்றுவிக்கப்பட வேண்டும்.

- கடற்றொழிலாளர் மீது விதிக்கப்பட்டுள்ள பாஸ் நடைமுறை நீக்கப்பட்டு அவர்கள் சுதந்திரமாகத் தொழில் செய்யக்கூடிய சூழல் ஏற்படுத்தப்பட வேண்டும்.

- இந்திய மீனவர்கள் அத்துமீறி எமது கடல் எல்லைக்குள் மீன் பிடித்து வருவதால், எமது கடல் வளம் சுரண்டப்படுவதுடன் எமது கடற்றொழிலாளர்களும் பாதிக்கப்படுகின்றனர். கடற்படையினர் இந்த அத்துமீறல்களைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

- யாழ்.குடாநாட்டில் பரவலாக கொலை, கொள்ளைச் சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன. இத்தகைய நிலையில் ஆயுதங்களுடன் நடமாடி வரும் மாற்றுக் குழுக்களிடமிருந்து ஆயுதங்கள் களையப்பட வேண்டும்.

- காலபோகம் நெருங்கியுள்ளதால், இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள வயல்நிலங்களில் மக்கள் விவசாயம் செய்வதற்கு அனுமதிக்கப்பட வேண்டும்.

- இதுவரை காலமும் திறக்கப்படாதிருந்த பொது வீதிகள் திறக்கப்பட்டு, மக்கள் போக்குவரத்திற்காக அவற்றைப் பயன்படுத்த அனுமதிகக வேண்டும்.

- வன்னி, மன்னார் பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து சென்று மீளக்குடியமர யாழ்.வந்துள்ள 15,000க்கும் மேற்பட்ட குடும்பங்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர விடப்பட வேண்டும். குறிப்பாக வலி.வடக்கு, தனங்கிளப்பு, கோயிலாக்கண்டி பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர வழி செய்யப்பட வேண்டும்.

ஆகிய விடயங்கள் பற்றி படைத்தரப்பிடம் எடுத்துக் கூறப்பட்டதாக யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இக்கலந்துரையாடல் பற்றி கருத்து தெரிவித்த போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதி ஒலே புரன்ரம் -உரையாடல் சுமுகமாக நடைபெற்றதாகவும், இன்னும் சில வாரங்களில் மீண்டும் இவ்வாறான சந்திப்பு நடைபெறுமெனவும் கூறியுள்ளார்.

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.02 | 96.45 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 150.31 | 151.69 |
| 1 யூரோ | 94.39 | 95.53 |
| 1 சுவிஸ் பிராங் | 64.70 | 65.82 |
| 1 அவுஸ்ரேலிய டொலர் | 51.61 | 52.66 |
| 1 ஜப்பானிய யென் | 00.78 | 00.79 |
| 1 சவூதி றியால் | 25.66 | 25.66 |

நமது ஈழநாடே வருக!
அழகுசாதனப் பொருட்கள்,
அன்பளிப்புப் பொருட்கள் மற்றும்
Feviaryl & Acron Paint items
என்பவற்றுக்கு

சந்தியா
மல்ரி கோட்யாட்
531, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
பிரதான வீதி, பண்டத்தரிப்பு.
(சி-002)